DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com
Ragu Thillainathan Sales Representative homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
என்னை அழையுங்கள்
Direct: 416-897-9155
Office: 905-201-9977

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

IMMIGRATION MATTERS?
OUR SERVICE ARE:
Immigration and Refugee
Landlord and Tenants
Small Claims Matters
Provincial Offences
416-334-9464

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

27ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எதிக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1493
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday November 15, 2024

# இலங்கையில் பெரும்பான்மை ஆட்சியில் அமரத் தயாராகும் அநுர குமார தலைமையிலான தேசிய மக்கள் கட்சியின் புதிய அரசு

## 'பழையவர்களும் புதியவர்களுமாக' பல கட்சிகள் சார்ந்து வடக்கு கிழக்கிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முகங்கள்










இலங்கைப் பாராளுமன்றத்திற்கு உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்காக நேற்று 14ம் திகதி வியாழக்கிழமை காலை தொடக்கம் மாலை வரை நடத்தப்பெற்ற பொதுத்தேர்தல் முடிவுகள் இந்தப் பதிவு எழுதப்பட்டுக்கொண்டிருக்கும்போது வெளிவந்து கொண்டிருக்கினறன. ஆனால் உத்தியோகபூர்வமான தேர்தல் முடிவுகள் வெளியாகும் வரையில் எமது பத்திரிகையின் அச்சுப் பகுதி அந்த முடிவுகளுக்காக காத்திருக்க இயலாத வகையில் இந்த செய்தி எழுதப்படுகின்றது.

இந்த நேரத்தில் உ த்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டுள்ள தேர்தல் முடிவுகளின் படி அநுரகுமார திசநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி கட்சிக்கு 52 ஆசனங்களும் சஜித் பிரேமதாசவின் என்ஜேபி கட்சியானது 13 ஆசனங்களையும் தமிழரக்கட்சி இரண்டு ஆசனங்களையும் பெற்றுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

இலங்கை மக்கள் மாத்திரமல்ல வெளிநாடுகளில் உள்ள மக்களும் எதிர்பார்த்திருந்த வகையில் தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி பெரும்பான்மை அரசொன்றை நிறுவி மக்களுக்கான சேவைகள் வழங்கும் ஆட்சியாக விளங்க தயாராகி வருவதாகவும் கொழும்பிலிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை. பல வருடங்களாக அமைச்சர்களாகவும் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் காட்சியளித்தும் மக்கள் சேவைக்கு பதிலாக தங்களையும் தங்கள் குடும்பத்தினரையும் சகாக்களையும் “கவனித்து“ வந்த பல அரசியல்வாதிகள் இந்த தேர்தலில் தோற்கடிக்கடிக்கப்பட்டனர் என்பது வெளிவந்து தேர்தல் முடிவுகளின்படி அறியப்படுகின்றது.

இதேவேளை யாழ்ப்பாணம்.வன்னி. திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்திலிலுருந்து பழையவர்களும் புதியவர்களுமாக பல கட்சிகள் சார்ந்து வடக்கு கிழக்கிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முகங்கள் பாராளுமன்றம் செல்லும் வாய்ப்பைப் பெற்றுள்ளனார்கள் என்ற தகவல்களும் வெளியாகி வருகின்றன.

அவர்களின் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம் பலம் அவர்களும் தமிழரசுக் கட்சியின் சார்பில் சிறிதரன் சிவஞானம் அவர்களும் வன்னி மாவட்டத்திலிருந்து செல்வம் அடைக்கலநாதன் அவர்களும் திருகோணமலை மாவட்டத்திலிருந்து கதிரவேலு சண்முகம் குகதாசன் அவர்களும் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் அவர்களும் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து புதிய முகமாக வைத்தியக் கலாநிதி ஸ்ரீ பவானந்தராஜா என்னும் வேட்பாளர் தேசிய மக்கள் சக்தியின் சார்பாகவும் சர்ச்சைகளுக்கு உள்ளாகிய மற்றுமொரு வைத்திய கலாநிதி அர்ச்சனா இராமநாதன் அவர்களும் பாராளுமன்றம் செல்வது உறுதியாகி விட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்தும் ஏனைய வடக்கு கிழக்கின் மாவட்டங்களிலிருந்தும் கணிசமான எண்ணிக்கையில் தேசிய மக்கள் சக்தி கட்சியின் வெற்றி பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றம் செல்லவுள்ளார்கள் என்பதும் இங்கு உறுதி செய்யப்பெற்றுள்ளது.

2024 பொதுத் தேர்தல் உறுதி செய்யப்படுவதற்கு முன்னர் இலங்கை முழுவதற்குமான மாவட்டங்களில் ஒவ்வொரு வேட்பாளரும் பெற்ற விருப்பு வாக்குகள் எண்ணப்பெற்று அதன் கணிப்புகளும் இறுதி முடிவுகளைத் தீர்மானிக்கும் விடயத்திற்கு அவசியமானவை என்பதால் அதற்காக காத்திருக்க வேண்டியுள்ளது.

எனினும் தற்போதை சில முடிவுகளை இங்கே பதிவு செய்யலாம் என்ற எண்ணம் இந்த பதிவு இங்கு தரப்படுகின்றது.

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிறாம்ரனிலும் அமைந்துள்ள எமது அடைவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East (2nd flr) Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
PRIME LEGAL SERVICES
905-334-6851

கனடாவிலிருந்து கியூபா சுற்றுலா!
இலங்கையை ஒத்த கால நிலையுள்ள கியுபா தேசத்திற்கு சென்று எமது தாயகச் சூழலை அனுபவியுங்கள். டிசம்பர் மாதம் முதல்வாரத்தில் இங்கிருந்து பயணம். ஒரு வாரம் அல்லது இரண்டு வாரங்கள் தங்கலாம்.
எம்மால் வழங்கப்படும் உணவோடு உடன் ஊராடு மற்றும் உடன் மீன் மற்றும் மரக்கறி வகைகள் பழங்கள் என அனைத்தையும் சுவையாகவும் சுத்தமாகவும் உண்டு மகிழலாம்.
தொடர்புகளுக்கு: Thava - 647-469-9839
என்னும் இலக்கத்தை அழைக்கவும்




### கனடிய மாதப் பத்திரிகையான தேசம் இதழின் நவம்பர் 2024 வெளியீட்டின் ஆசிரிய தலையங்கம்

# பார்வை அற்ற குருடர்களாக காணப்படும் தமிழ் பேசும் வேட்பாளர்களுக்காக பெறுமதி வாய்ந்த வாக்குகளை பயன்படுத்தவுள்ள தமிழ் மக்கள்

இம் மாதம் 14ம் திகதி வியாழக்கிழமை இலங்கையின் 17பொதுத் தேர்தல் நடைபெறுகின்றது. முழு இலங்கைக்குமான பொதுத் தேர்தலாக நாம் இதனைப் பார்த்தால் தேசத்தின் எதிர்காலம் பற்றிய அக்கறை கொண்டவர்களுக்கு தேர்தல் முடிவுகள் தற்போதைய ஜனாதிபதிக்கு ஆதரவானதாக அமைய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனென்றால் ஜனாதிபதிக்கு ஆதரவான பாராளுமன்றம் அமையாவிடில் இலட்சக் கணக்கான வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற அவரது இருப்பு கேள்விக்குறி ஆகிவிடும் என்ற ஆதங்கம் இலங்கையர்கள் பலருக்கு இருப்பதை உணரக்கூடியதாக உள்ளது.

மறுபக்கத்தில் ஆண்டாண்டு காலமாக ஆட்சி பீடங்களில் அமர்ந்த நாட்டையும் மக்களையும் கொள்ளையடித்து சுகபோகங்களை அனுபவித்த நாயக்க பரம்பரையும் ராஜபக்சாக்களும மக்களால் மறக்கப்பட்டவர்களாக ஆக்கப்பட்டாலும் அவர்களின் ஆட்சிக்காலத்தில் அடிவருடிகளாக இருந்தவர்களின் சகாக்கள் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்வதில் ஆர்வத்துடன் உள்ளதையும் காணக்கூடியதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறான நெருக்கடியான நிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் அமைச்சர்களாகவும் இருந்து நாட்டின் வளங்களை உறிஞ்சியவர்களும் "ருசி"கண்டவர்களும் வெறி கொண்டவர்களாகவே இந்த தேர்தலில் பங்கெடுப்பார்கள் என்பதும் குறிப்பாக முஸ்லிம் மக்களின் வாக்குகளில் கொண்டாட்டங்களை நடத்திய அவர்களது இனம் சார்ந்த "கொழும்புத் தலைமைகளும்" வர்த்தக மாபியாக்களும் தங்கள் சுகபோகங்களை எளிதாக இழந்த விட மனமில்லாதவர்களாக தங்கள் வளங்களைப் பாவித்து வெற்றிகளை ஈட்டிக் கொள்ள துடிப்பதையும அவதானிக்கக் கூடியுதாகவும் உள்ளது.

--------------------------

இவ்வாறாக இலங்கையின் என்னும் மாங்கனித்தீவை கடித்துக் குதறிய அணில்களான ரணில் போன்றவர்கள் தோற்கடிக்கப்பட வடக்கிலும் கிழக்கிலும அவர்களது வாரிசுகள் பல நப்பாசைகளோடு போட்டியிடுவதும் நகைப்பிற்கு இடமாக தென்படுகின்றது. ரணிலுக்கு முன்பதாக நாட்டைச் சூறையாடிய கோட்டாபாயாக்கள் கூட தங்கள் வாரிசுக்கள் எப்படியாவது பாராளுமன்ற உறுப்பினர்களாக வந்த விட வேண்டும் என்ற கனவு-களோடு தேர்தல் களங்களில் நகர்ந்து செல்வதும் அறியக்கூடியதாக உள்ளது.

இவ்வாறான நிலையில வடக்கிலும் கிழக்கிலும் "தமிழ்த் தேசியம்" என்ற தாரகா மந்திரத்தை வார்த்தைகளாக மட்டும் உச்சரித்துக் கொண்டு ஆனால் வெவ்வேறு சின்னங்களிலும் வர்ணங்களிலும் போட்டியிடும் தமிழ் பேசும் வேட்பாளர்கள்
நூற்றுக்கணக்கானவர்கள் மிக குறைந்த எண்ணிக்கை கொண்ட ஆசனங்களுக்காக போட்டியிடுவது என்பது அவர்களை கண் பார்வை இழந்த குருடர்களாகவே எமது தமிழ் பேசும் வாக்காளப் பெருமக்கள் பார்க்கின்றார்கள்.

இந்தக் குருடர்கள் பார்வை அற்றவர்களாக மட்டுமன்றி கொள்கைகளை துறந்து விட்டு தூர நோக்குச் சிந்தனைகள் எதுவுமின்றி அவர்கள் பதவி மோகத்தில் பிதற்றும் பிரச்சாரங்களை கொள்வதும் அநுர என்னும் எதிர்ப்புக் கோசத்தை மாத்திரம் உச்சரித்த வண்ணம் வாக்காளர்கள் மத்தியில் செல்வதும் மக்கள் அனைவருக்கும் "விரும்பத்தகாத" பிரச்சாரக் கோசங்களாகவே கணிக்கப்படுகின்றது என்பது தான் உண்மை.



Canada
We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign)
JOURNALISTS: Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

## "ஊழல்வாதிகளையும்" "பொய்யர்களையும்" வீட்டுக்கு அனுப்பி வைத்துவிட்டு நாடாளும் மன்றத்திற்குள் பெரும்பான்மை பலத்தோடு நுழை — ழயும் அநுர குமார

வளங்கள் பல நிறைந்ததும் வற்றாத ஆறுகளும் நான்கு திசைகளிலும் கடல் வளமும் வன வளமும் நிறைந்த மாங்கனித் தீவாம் இலங்கையை 75 ஆண்டுகளுக்கு மேலாக மாறி மாறி ஆட்சி செய்து வந்த இனவாத முதலாளித்துவ அரசுகளும் அவற்றிக்கு துணையாக நின்று தங்களையும் தங்கள் குடும்பத்தினரையும் வாழ்க்கையின் உச்சத்திற்கு உயர்த்திச் சென்ற தமிழ் பேசும் அரசியல்வாதிகளையும் வீட்டுக்கு (அதில் உண்மை இல்லை) அவர்களின் மாளிகைகளுக்கு என்று கூறவேண்டும்) அனுப்பிவைத்து விட்டு இன்னும் சில நாட்களில் இலங்கையின் நாடாளுமன்றம் என்னும் பாராளுமன்றத்திற்கு பெரும்பான்மைப் பலத்தோடு செல்லத் தயாராகும் அனைவரோடும் சேர்ந்து எமது ஆசிரிய பீடமும் புதிய அரசிற்கும் அதன் ஜனாதிபதிக்கும் எமது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றுத.

இந்த வெற்றி என்பது சாதாரணமாக எட்டிய ஒன்றல்ல. எத்தனையோ ஆண்டுகள் காத்திருந்து எத்தனையோ உயிர்களைப் பறிகொடுத்து தியாகங்களை பல வற்றை யெ்து கைதுகளுக்கு மறைந்திருந்து. காத்திருப்புகளோடு பெற்ற ஒன்று. இலங்கையை ஆட்சி செய்த சில பத்து குடும்பங்களும் அவற்றின் உறுப்பினர்களும் தவிர்ந்து அங்கு வாழும் இலட்சக்கணக்கான மத்திய தர மற்றும் ஏழைக் குடும்பங்கள் மற்றும் தொழிலாள விவசாயக் குடும்பங்கள் அனைத்தும் இணைந்து முடித்துக் காட்டிய முத்தாய்ப்பான சாதனை இது.

இன மத மொழிப் பேதமற்ற வகையில் இந்த நேரத்தில் அமைதியாக இருந்து கொண்டாடும் அனைவரும் இன்னும் சில ஆண்டுகளில் இலங்கையில் பேரினவாதிகளால் ஏற்படுத்தப்பெற்ற இனவாதம். மதவாதம்., வர்க்க பேதம் ஆகியவற்றை கடந்து அனைத்து இனத்தவர்களுக்கும் உள்ள பிரச்சனைகள் மற்றும் வேதனைகள் களையப்பெற்று குறிப்பாக வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் மற்றும் மலையத் தொழிலாளர்களின் வாழ்வாதாரப் பிரச்சனைகள் அனைத்தும் தீர்க்கப்பெற்று சுபீட்சமான வாழ்வு தீவெங்கும் எங்கும் மலர நாம் பிரார்த்திநிற்போமாக!

## யாழ்ப்பாண மாவட்டத்தில் சுயேட்சைக் குழு அமைத்து அபோட்டியிட்ட வைத்தியர் அர்ச்சுனா ஒரு ஆசனத்தைப் பெறும் போதுமான வாக்குகளைப் பெற்றுள்ளதாக தகவல்



யாழ்ப்பாண மாவட்டத்தில் சுயேட்சைக் குழு ஒன்றை அமைத்து அதில் போட்டியிட்ட வைத்தியர் அர்ச்சுனா ஒரு ஆசனத்தைப் பெறுவதற்குப் போதுமான வாக்குகளைப் பெற்றுள்ளதாக வாக்குகள் எண்ணும் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி இரண்டு ஆசனங்களையும் தமிழரசுக்கட்சி, ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணி, அ.இ.த.கா. மற்றும் அர்ச்சுனா தலைமையிலான சுயேட்சைக் குழு போன்றன ஒவ்வொரு ஆசனங்களையும் வெற்றிபெற்றுள்ளதாகத் தெரியவருகின்றது.

வைத்தியர் அரச்சுனா தலைமையிலான சுயேட்சைக்குழு மொத்தம் 27,855 வாக்குகளைப் பெற்றுள்ளதாக உத்தியோகப்பற்றற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதுவும், சங்குச் சின்னத்தில் போட்டியிட்ட ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியை விட அவர் அதிக வாக்கெடுத்து வெற்றிபெற்றுள்ளதாகவும் கூறப்படுகின்றது,

யாழ்ப்பாண தேர்தல் களத்தில் வைத்தியர் அர்ச்சுனா அதிக சர்சைக்குள்ளாகிய ஒரு வேட்பாளர். என்பதும் வடக்கு வைத்தியர்கள் செய்யும் ஊழல் மற்றும் மோசடிகளை துணிச்சலாக வெளிக்கொண்டு வந்தவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது பல்வேறு அரசியல்வாதிகளினாலும், அதிகம் விமர்சனத்துக்கும் அவர் உள்ளாகியிருந்த வைத்திய அர்ச்சனா அவர்களை யாழ்ப்பாண மாவட்ட மக்கள் குறிப்பிட்ட அளவு வாக்குகளினால் வெற்றியடையப் செய்திருப்பதும் இதேவேளை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் அங்கு தோற்கடிக்கப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.






# யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற விபத்தில் தென் இலங்கையில் இருந்து சுற்றுலா சென்ற குடும்பப் பெண் உயிரிழப்பு!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

தென்பகுதியில் இருந்து சுற்றுலாவிற்காக யாழ்ப்பாணம் சென்றவர்களின் கார் மீது பட்டாரக வாகன மோதியதில் பெண்ணொருவர் 10ம் திகதி திங்கட்கிழமையன்று உயிரிழந்துள்ளார். இதன்போது கம்பஹாவைச் சேர்ந்த டோனி ப்ரெயன் பெரேரா ரணசிங்க வீரக்கொடியே குசும்புஸ்பராணி (வயது 60) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் சுற்றுலாவிற்காக கடந்த ஒன்பதாம் திகதி யாழ்ப்பாணம் வந்துள்ளனர். இதன் போது தெல்லிப்பழை சந்திக்கும் பொலிஸ் நிலையத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் பட்டாராக வாகனமும் குறித்த காரும் மோதி விபத்து சம்பவித்தது.

இதன்போது படுகாயமடைந்த குறித்த பெண் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி அடுத்த நாள் அவர் உயிரிழந்தார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் சடலம் ஒப்படைக்கப்பட்டது.

# வடமராட்சி கல்வி வலய மாணவர் பாராளுமன்றம்!

யாழ்ப்பாணம் வடமராட்சி கல்வி வலய மாணவர் பாராளுமன்ற அமர்வு நெல்லியடி மத்திய கல்லூரியில் வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளரும், மாணவர் பாராளுமன்ற செயலாளர் நாயகமுமான ப.அருந்தவச்செல்வம் தலைமையில் 12ம் திகதி செவ்வாய்கிழமையன்று காலை 10:00 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது.

இதில் முதல் நிகழ்வாக விருந்தினர்கள் வரவேற்கப்பட்டு விழா மண்டபம் வரை அழைத்து வரப்பட்டு மங்கல சுடர்கள் ஏற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

அதனை தொடர்ந்து வடமராட்சி கல்வி வலய மாணவர் பாராளுமன்றத்திற்க்கான சபாநாயகர் தெரிவு இடம் பெற்றது. சபாநாயகராக ஹாட்லிக் கல்லூரி மாணவன் சிவகணேசன் அனந்திகன் சபாநாயகராக தெரிவு செய்யப்பட்டு சபாநாயகர் தலைமையில் அமர்வுகள் இடம் பெற்றது.

மாணவர் பாராளுமன்ற உறுப்பினர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது பிரேரணைகளை மூன்வைத்ததை தொடர்ந்து அடுத்த அமர்வு திகதி தீர்மானிக்கப்பட்டு அமர்வு நிறைவுற்றதும்.







இதில் பிரதமவிருந்தினராக துணுக்காய் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. நிறைஜா - மயூரதாசன், சிறப்புவிருந்தினராக நெல்லியடி மத்திய கல்லூரி அதிபர் திரு. கணேசரட்ணம் - கிருஸ்ணகுமார், பிரதிக் கல்விப் ணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், வலயத்திற்க்கு உட்பட்ட அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர் பாராளுமன்ற பொறுப்பாசிரியர்கள், நெல்லியடி மத்திய கல்லூரி சமூகம், என பலரும் கலந்து கொண்டனர்.

# பருத்தித்துறை கடற்பரப்பில் 12ம் திகதி செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்ட 12 இந்திய மீனவர்களுக்கும் 20ம் திகதிவரை விளக்கமறியல்!



எல்லை தாண்டிய கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள். 12 பேரையும் எதிர்வரும் இருபதாம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற உத்தரவிட்டுள்ளது.

12ம் திகதி வசெவ்வாய்க்கிழமை அன்று அதிகாலை பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டு மயிலிட்டி கடற்படை முகாமில் வைத்து விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் யாழ்ப்பாண நீரியல் வளத்துறை மற்றும் கடத்றொழில் அமைச்சு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு அவர்கள் ஊடாக சற்று முன்னர் பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையிலேயே அவர்களை எதிர்வரும் இருபதாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# மேச்சல் தரவை இருந்தும் தர மறுக்கிறார்கள்: அதிகாரிகளும் அரசியல் வாதிகளுமே இடையூறு

## நானாட்டான் பண்ணையாளர்கள் ஆளுநரிடம் முறைப்பாடு!

மன்னார் நானாட்டான் பிரதேச பண்ணையாளர்களுக்கான மேய்ச்சல் தரவை நிலம் ஒதுக்கப்பட்டும் அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளின் தலையிடினால் எட்டு வருடங்களாக கையளிக்கப்படவில்லை என பணியாளர்கள் குற்றச்சாட்டினார்கள்.

12ம் திகதி அன்று செவ்வாய்க்கிழமை வட மாகாண ஆளுநரின் யாழ்ப்பாணத்தில் உள்ள தலைமைச் செயலகத்தில் தமது மேய்ச்சல் தரவை நிலங்களை மீட்டுத் தருமாறு கோரி மஜகர் கையளித்த பின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் நானாட்டான் பகுதியிலுள்ள மேய்ச்சல் தரவை நிலத்தை நம்பி 2500 குடும்பங்களைச் சேர்ந்த 35 ஆயிரம் கால்நடைகள் உள்ளன.



எமக்கான மேய்ச்சல் தரவை நிலம் ஒதுக்கப்பட்ட நிலையிலும் அதனை கையளிப்பதற்கு அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் இடையூறு விளைவித்து வருகின்றனர்.

மன்னாரில் உள்ள உயர் அதிகாரிகாகு மேச்சல் தரவை நிலத்தில் திருட்டுத்தனமாக காணி இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ள நிலையில் அதனை மக்கள் பாவனைக்கு வழங்க விடாமல் அரசியல் பின்னணியில் தடுப்பதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளது.

மேச்சல் தரவை நிலத்தை தருமாறு எட்டு வருடங்களுக்கு மேலாக போராடி வருகிறோம் தருகிறோம் எனக் கூறுகிறார்கள் ஆனால் இதுவரை தரவில்லை.

இவ்வாறான நிலையில் வடமாகாண ஆளுநரிடம் எமது கோரிக்கையை கையளித்திருக்கிறோம் அவர் எதிர்வரும் 21ஆம் திகதி மன்னாருக்கு வருகை தந்து எமது பிரச்சினைகள் தொடர்பில் நேரில் ஆராய்வதாக தெரிவித்திருக்கிறார்.

ஆகவே எமது பிரதேச மக்கள் வாழ்வாதார தொழிலாக பண்ணை வளர்ப்பில் ஈடுபட்டுவரும் நிலையில் எமக்கான மேய்ச்சல் தரவை நிலத்தை பெற்றுத்தருமாறு கேட்டுக்கொள்கிறோம் என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி aches | Stress, Migraine & All Types of Head- |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்

Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.

(416) 754-4024

5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

# மன்னாரில் மக்களால் விரும்பப் பெற்றுச் சிறப்பாக இடம்பெற்ற வீதி நாடகம் "பெண்களின் பங்களிப்பை அரசியலில் மேம்படுத்துவோம்"

- எஸ்.ஆர்.லெம்பேட் (08-11-2024)



நாடளாவிய ரீதியில் பாராளுமன்ற தேர்தல் பிரச்சார பணிகள் இடம்பெற்று வருகின்ற நிலையில் தேர்தலில் பெண்களின் பங்கு பற்றலை அதிகரிக்கும் முகமாகவும் அரசியலில் பெண்களின் அங்கத்துவத்தை ஸ்திர படுத்துவதை நோக்காக கொண்டு தயாரிக்கப்பட்ட விழிப்புணர்வு வீதி நாடகம் 7ம் திகதி வியாழக்கிழமையன்று மன்னார் பேருந்து நிலையத்தில் காட்சிப்படுத்தப்பட்டது.

மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவி மகாலட்சுமி குரு சாந்தனின் ஒழுங்கமைப்பில் மன்னார் பிரதான பேருந்து நிலையத்தில் குறித்த வீதி நாடகம் அரங்கேற்றப்பட்டது.

குறித்த நாடக காட்சிப்படுத்தலில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கனகேஸ்வரன்,மன்னார் மாவட்ட உதவி அரசாங்க அதிபர், அரச உத்தியோகத்தர்கள், மாதர் அபிவிருத்தி ஒன்றிய பிரதிநிதிகள், பொதுமக்கள் உள்ளடங்களாக பலர் கலந்து கொண்டு நாடகத்தை முழுமையாக பார்வையிட்டனர்.

இதனை தொடர்ந்து குறித்த வீதி நாடகமானது நானாட்டான் பிரதேச செயலகத்திற்கு முன்பாகவும் காட்சிப்படுத்தப்பட்டது டன் மன்னார் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் பெண் அரசியல் பிரவேசம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக காட்சிப் படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய மட்ட, வடமாகாண விளையாட்டுப் போட்டிகளில் சாதனை படைத்த மன்னார் தோட்டவெளி தமிழ் கலவன் பாடசாலை மாணவர்கள் கௌரவிப்பு



- எஸ்.ஆர்.லெம்பேட் (08-11-2024)

தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் மன்னார் மாவட்டத்தில் முதல் தடவையாக தங்கப் பதக்கம் பெற்ற பெற்ற முதல் வீராங்கனையான மன். தோட்டவெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவி ஏ.யதுர்சிக்கா, மற்றும் வடமாகாண மெய்வல்லுநர் தடகளப் போட்டியில் சாதனை படைத்த மாணவர்கள் கௌரவிக்கும் நிகழ்வு 08-11-2024 வெள்ளிக்கிழமை காலை மன்னாரில் இடம் பெற்றது.

தோட்டவெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் தலைமையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.





இதன் போது சாதனை படைத்த மாணவ மாணவிகள் மன்னார் பிரதான பாலத்தடியில் வைத்து கௌரவிக்கப்பட்டு வாகன பவனியாக தோட்டவெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை வரை அழைத்துச் செல்லப்பட்டனர்.

அதனை தொடர்ந்து பாடசாலையில் கௌரவிப்பு நிகழ்வுகள் இடம் பெற்றது.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக மன்னார் பிரதேசச் செயலாளர் எம்.பிரதீப், மன்னார் வலயக்கல்வி பணிப்பாளர் செல்வி ஜி.டி.தேவராஜ், மற்றும் விசேட விருந்தினர்களாக அருட்தந்தை தமிழ் நேசன் அடிகளார், அருட்தந்தை எம்.ஜெயபாலன் அடிகளார் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இதன் போது சாதனை படைத்த மாணவ மாணவிகள் கௌரவிக்கப்பட்டனர்.





# பாடசாலை மாணவர்களுக்கு சீனா சீருடைத் துணி — யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி அநுர அறிவிப்பு!

உலக செய்திகள் World News

இலங்கை முழுவதும் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு சீன நாட்டிலிருந்து சீருடை துணி வழங்கப்பட உள்ளதாக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்றையதினம் யாழ்ப்பாணம் பாசவூர் பகுதியில் இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற வேட்பாளர்களை ஆதரித்து இடம்பெற்ற பிரச்சார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் அவிவிருத்தி செயற்பாடுகளுக்கு சீனா பல வழிகளிலும் உதவி செய்து வருகிறது.

அந்த வகையில் இலங்கை முழுவதும் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு எதிர்வரும் வருடம் 2025 ஆம் ஆண்டு சீருடை துணி வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் பெயரையும் அதன் இலட்சனையையும் தொடர்ச்சியாக சட்ட விரோதச் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தி வரும் மாவை சேனாதிராஜாவின் சகோதரர் ஜேர்மனி வாழ் மாவை தங்கராசா



## அவருக்கு உடந்தையாகச் செயற்படும் அமரர் அ. அமிர்தலிங்கத்தின் புதல்வர் இங்கிலாந்து வாழ் அ.பகீரதன்.

## உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கண்டனம்.

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் என்னும் புனிதமான அமைப்பு 1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கப்பெற்ற பின்னர் இந்த வருடத்தின் இயக்கத்தின் பொன்விழா ஆண்டாக 2024 திகழ்கின்றது. உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைமையகம் கடந்த பல வருடங்களாக கனடாவில் பதிவு செய்யப்பெற்று உலகெங்கும் பல நாடுகளில் மாநாடுகளை நடத்தியும் தொடர்ச்சியாக தமிழ் மொழி சார்ந்தும் பண்பாடு சார்ந்தும் பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. இயக்கத்தின் பெயரும் இலட்சனையும் கனடாவின் மத்திய அரசாங்கத்தில் பதிவு செய்யப்பெற்று அதன் உரிமைத்துவம் கனடாவில் இயங்கிவரும் அதன் இயக்குனர் சபைக்கே உரித்தானவையாக விளங்குகின்றன.

இந்த இயக்கத்தின் செயலாளர் நாயகமான ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் அவர்களும் தற்போது செயற்பட்டு வருகின்றார். அவரோடு இணைந்து இயக்கத்தின் வளர்ச்சிக்காக முப்பது வருடங்களுக்கு மேலாக உழைத்து வரும் பல அன்பர்கள் உலகின் பல நாடுகளிலிருந்தும் உற்சாகத்துடனும் விசுவாசமாகவும் செயற்பட்டு பக்கதுணையாக இருந்து வருகின்றார்கள்.

ஆனால் கடந்த சில வருடங்களாக எமது உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் பெயரையும் அதன் இலட்சனையையும் தொடர்ச்சியாக சட்ட விரோதச் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தி வரும் இழிவான செயற்பாடுகளில் சில நாடுகளில் வாழும் மோசடி நபர்கள் சிலர் இணைந்து எவ்வித தயக்கமோ அன்றி கூச்சமோ இன்றி அறிக்கைகளை வெளியிடுவதும் “மாநாடுகள்” என்ற பெயரில் அறிஞர்களையும் பெரியோர்களையும் பொய்யான தகவல்களைத் தெரிவித்து அழைத்து கூடுவதுமாக அவர்களின் சட்ட விரோத செயற்பாடுகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. இவ்வாறான சட்ட விரோதமான செயற்பாடுகளுக்கு முக்கியமான மோசடி நபராகத் விளங்குபவர் முன்னாள் இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவின் சகோதரரான ஜேர்மனி வாழ் மாவை தங்கராசா விளங்குகின்றார். இவருக்கு உதவியாக தமிழ்நாடு வாழ் பஞ்ச் இராமலிங்கம் என்பவரும் இன்னும் சிலரும் செயற்படுகின்றார்கள். தற்பொழுது இந்த மோசடி நபர்கள் இருவரும் ஒரு முக்கிய அன்பர் ஒருவரையும் பொய்யான தகவல்களைப் பகிர்ந்து கொண்டு முன்னாள் இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அமரர் அ. அமிர்தலிங்கத்தின் புதல்வரும் வைத்திய கலாநிதியுமான இங்கிலாந்து வாழ் அ.பகீரதன் அவர்களையும் இந்த சட்டவிரோதமான செயற்பாடுகளில இணைத்துக் கொண்டு ஆங்காங்கே கூட்டங்களை நடத்தி வருகின்றார்கள்.

இந்த செயற்பாடுகளின் தொடர்ச்சியாக எமது புனிதமான இயக்கத்தின் பெயரையும் இலச்சனையையும் பயன்படுத்தி இந்த மோசடிப் பேர்வழிகள் தாய்லாந்தில் ஒரு ஆய்வரங்கத்தை எதிர்வரும் நவமபர் மாதம் 27ம் 28ம் திகதிகளில் தாய்லாந்து தேசத்தின் பல்கலைக் கழகம் ஒன்றில் நடத்தவுள்ள விளம்பர அறிவித்தல்கள் பல இடங்களுக்கு பகிரப்பட்டுள்ளன. இதன் பிரதி ஒன்று எமது கனடா தலைமை அலுவலகத்திற்கும் கிடைத்த காரணத்தால், இவ்வாறான ஒரு கண்டன அறிக்கையை வெளியிட வேண்டிய அவசியம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

மேற்படி விளம்பர அறிவித்தல்களில் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைத் தலைமையகமே ஏனைய மூன்று அமைப்புக்களுடன் இணைந்து தாய்லாந்து தேசத்தில் நவம்பர் மாதம் ஆய்வரங்கத்தை நடத்துவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எமது உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்திற்கு இலங்கையில் ஒரு கிளை நிறுவப்பெற்று அது சிறப்பாகச் செயற்பட்டு வருவதையும் இந்த இடத்தில் நாம் குறிப்பிட விரும்புகின்றோம்.

எனவே இந்த கண்டன அறிக்கையை வெளியிடுவதன் மூலம் இவ்வாறான தொடர்ச்சியான சட்ட விரோத செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதும் எமது அங்கீகரிக்கப்பெற்ற இயக்கத்தின் கனடாவில் இயங்கும் தலைமையகம் மூலம் மேலும் ஆக்கபூர்வமான பணிகளை தொடர இலகுவாக இருக்கும் என்பதே எமது நோக்கு ஒழிய, சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுப்பது கூட எமது நோக்கமல்ல என்பதையும் நாம் இந்த அறிக்கை மூலம் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த சட்டத்திற்கு முரணான செயற்பாடுகளில் எமது கனடாத் தலைமையகம் வேறு பணிகளைச் செய்யும் முயற்சிகள் பின் தள்ளப்படுகின்றன. எனவே இவ்வாறான பாதகமான செயற்பாடுகளை நிறுத்தும் வகையில் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனைத்துலகின் தமிழ்ச் சமூகத்தின் பிரதிநிதிகளாக விளங்கும் கல்வியாளர்களும் தமிழ்ப் பண்பாட்டை நேசிப்பவர்களும் புத்திமதிகள் கூறவேண்டும் என்றும் வேண்டிக் கொள்கின்றோம்.

இவ்வாறு. உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மன்னாரில் சுகாதாரச் சீர்கேடுகளுடன் இயங்கி வந்த இரண்டு வெதுப்பகங்களுக்கு சீல்

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

- எஸ்.ஆர்.லெம்பேட் (08-11-2024)

மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சுகாதார சீர்கேடுகள் உடன் பொது மக்களின் சுகாதாரத்திற்கு தீங்கு விளைவிக்கும் வகையில் இயங்கி வந்த இரண்டு போக்கிரிகள் (வெதுப்பகங்களுக்கு) நீதிமன்ற உத்தரவு பெற்று மன்னார் பொது சுகாதார பரிசோதகர்கள் 7ம் திகதி வியாழக்கிழமை சீல் வைத்துள்ளனர்.

கடந்த பல மாதங்களாக மன்னார் பொது சுகாதார பரிசோதகர்கள் குறித்த வெதுப்பகங்கள் தொடர்பில் பரிசோதிக்கப்பட்டு 12 குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என கடிதம் மூலம் அறிவிக்கப்பட்ட போது குறித்த வெதுப்பகங்கள் அறிவிப்புக்கள் தொடர்பில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாத நிலையில் குறித்த வெதுப்பகங்களுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் நகரில் உள்ள இரண்டு வெதுப்பகங்களையும் எதிர்வரும் 21ஆம் திகதி வரை மூடு மாறும் பொது சுகாதார பரிசோதகர்கள் சுட்டிக்காட்டி 12 சுகாதார பிரச்சினைகளும் நிவர்த்தி செய்யும் வரை குறித்த வெதுப்பகங்கள் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் அனுமதி மறுக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நீதிமன்ற அறிவித்தல் ஊடாக சுட்டிக்காட்டப்பட்ட வெதுப்பகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

அதே போன்று மன்னார் மாவட்டத்தில் சுகாதார சீர்கேடுகள் உடன் இயங்கி வரும் உணவகங்கள் தொடர்பிலும் மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனையினால் நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

# யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் உயிரிழப்பு!

11ம் திகதி திங்கட்கிழமை அன்றையதினம் மானிப்பாய் - கைதடி பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் ஸ்தலத்தில் உயிரிழந்துள்ளார். இதன்போது அரசடை வீதி வட்டுத்தெற்கு வட்டுக்கோட்டை பகுதியைச் சேர்ந்த தம்பிராசா தயாகுமார் (வயது 53) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த நபர் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது வீதியில் சென்ற இன்னொரு மோட்டார் சைக்கிளில் சென்ற நபரை முந்திச் செல்வதற்கு முயற்சித்தார். இதன் போது குறித்த மோட்டார் சைக்கிளுடனும் மோதி, கிளுவை மரத்துடனும் மோதி விபத்து சம்பவத்தில் அவர் இவ்வாறு உயிரிழள்ளந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# மாசடைந்த மாங்கனித் தீவை மட்டுமல்ல அதன் ஆட்சியாளர்கள் என்னும் போலி அரசியல்வாதிகள் "கூடிக் கதைத்த" இலங்கைப் பாராளுமன்றத்தையும் "சுத்தம் செய்யத்" தயாராகிவிட்ட தேசிய மக்கள் சக்தி

இந்தக் கருத்துப் பதிவை எழுதத் தூணடிய பதிவு ஒன்று முகநூலில் காணப்பட்டது. அந்த பதிவை அடித்தளமாக வைத்து இந்த பக்கத்தை நாம் தயார் செய்துள்ளோம்

இந்த நேரத்தில் இலங்கைப் பாராளுமன்றத்தின் 2024ம் ஆண்டு பொதுத் தேர்தல் முடிவுகள் வெளியாகிய வண்ணம் உள்ளன.

இலங்கையர்கள் என்ற வகையில் அங்கு வாழும்" தமிழ் சிங்கள இஸ்லாமிய பறங்கி இன மக்கள் பெருமளவில் பெருமூச்சு விடுகின்ற உணர்வின் வெளிப்பாடுகள் ஆங்காங்கே தோன்றியிருக்கின்றன.

தேசிய மக்கள் சக்தி பெரும்பான்மையைக் கடந்து அறுதிப் பெரும்பான்மையை வெற்றியை நோக்கி நகர்ந்துகொண்டுள்ளதாக எண்ணப்பட்டுக் கொண்டிருக்கும் தேர்தல் முடிவுகள் தெரிவிக்கின்றன. இலங்கையின் ஒவ்வொரு மாவட்டத்திலும் கூடுதல் வாக்குகளையும் ஆசனங்களையும் தேசிய மக்கள் சக்தி சுவீகரித்துக்கொண்டுள்ளது. விதிவிலக்காக மட்டக்களப்பில் மட்டும் தேசிய மக்கள் சக்தி இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. சிறுபான்மைக் கட்சிகள் அவர்களுடைய சொந்த மண்ணில் மண் கவ்வுகின்றனர். வடக்கு, கிழக்கு, மலையகம் எங்கும் தேசிய மக்கள் சக்தி வாக்குகளைக் குவித்து ஆசனங்களையும் குவித்து வருகின்றது. தமிழ், முஸ்லீம், மலையகக் கட்சிகள் இரண்டாம், மூன்றாம் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

இலங்கையின் வரலாற்றில் முதற் தடவையாக யாழ்ப்பாணத்தில் தமிழ் தேசியக் கட்சி இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டது இதுவே முதற் தடவையாகும். இந்நிலை யாழ் மாவட்டத்தில் மட்டுமல்லாமல் வடக்கு கிழக்கின் ஏனைய மாவட்டங்களிலும் இந்நலையே காணப்படுகின்றது. தேசிய மக்கள் சக்தி தமிழர் பெரும்பான்மையாக வாழும் அனைத்து மாவட்டங்களிலும் கூடுதல் வாக்குகளைப் பெற்று நாட்டில் மட்டுமல்ல தமிழ் மக்களின் பூர்வீக தாயகப் பிரதேசங்களிலும் கூடுதல் வாக்குகளையும் ஆசனங்களையும் பெற்று முன்னிலை வகிக்கின்றது. தேசிய மக்கள் சக்தி யாழில் இரண்டு முதல் மூன்று ஆசனங்களையும் தமிழரவுக் கட்சி ஒன்று அல்லது இரண்டு ஆசனங்களையும் பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.



இத்தேர்தலில் விதிவிலக்காக இலங்கையில் கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் தமிழரசுக் கட்சி கூடுதல் வாக்குகளையும் ஆசனங்களையும் பெற்று முன்னிலை வகிக்கின்றது. தமிழரசுக் கட்சியின் எம் ஏ சுமந்திரனின் நண்பரான இராசமாணிக்கம் சாணக்கியன் மட்டக்களப்பு மாவட்டத்தில் 60,000க்கும் அதிகமான விருப்பு வாக்குகளைப் பெற்று முன்னிலையில் உள்ளளார். அவருக்கு அடுத்த படியாக் ஞானமுத்து சிறினேசன் முன்னணி வகிக்கின்றார். வடக்கு கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமே தமிழரசக் கட்சி கூடுதல் வாக்குகளையும் கூடுதல் ஆசனங்களையும் பெற்றுக்கொண்டுள்ளது. மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சி இரண்டு முதல் மூன்று ஆசனங்களைப் பெற்றுக்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கது கிழக்கில் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்ட பாரம்பரிய தமிழ் ஊடகங்களால் புனையப்பட்ட தமிழ் தேசியவாதக் கதையாடல்கள் எதற்கும் தமிழ் மக்கள் செவிமடுக்கவில்லை. ஜோதிலிங்கம், நிலாந்தன் போன்ற ஊடகவியலாளர்கள் விமர்சகர்களின் கருத்துக்களை வடக்கு கிழக்கு மக்கள் கணக்கில் கொள்ளவில்லை. அதனால் அங்குள்ள ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் தமிழ் தேசியத்துக்கு வாக்களிக்காத தமிழ் மக்களை அறிவற்றவர்கள், துரோகிகள், கற்பனாவாதிகள் என தமக்கு வாய்க்கு வந்தபடி விமர்சனங்களை வைக்கின்றனர். தமிழரசுக் கட்சிக்கு எதிராக தனது ஊடகத்தை முடுக்கிவிட்ட ஐபிசி பாஸ்கரனின் கருத்துநிலைப்பாட்டை மக்கள் முற்றாக ஒதுக்கித் தள்ளியுள்ளனர்.

இலங்கையின் 10வது பாராளுமன்றத்தை தெரிவு செய்வதற்கு நடைபெற்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வரலாறு காணாத சாதனையை நிகழ்த்தி வருகின்றது. சுதந்திர இலங்கையில் முதற்தடவையாக வடக்குக் கிழக்கும் தெற்கும் இணைந்து இனவாதத்தை புறம் தள்ளி ஒரு தேர்தலைச் சந்திக்கின்றனர். இலங்கைப் பாராளுமன்றத்துக்கான 225 உறுப்பினர்களில் 196 உறுப்பினர்கள் வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்யப்பட உள்ளனர். 29 உறுப்பினர்கள் தேசியப்பட்டியலில் இருந்து தெரிவு செய்யப்பட உள்ளனர். 113 ஆசனங்களை வெற்றிகொள்ளும் கட்சி பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியை அமைக்கும். தற்போது என்பிபி அனுதிப் பெரும்பான்மையை நோக்கி நகர்ந்து கொண்டுள்ளது.


YOU MAY BE SURPRISED TO KNOW

THERE ARE JUST A FEW CONDITIONS THAT ARE COVERED UNDER

CANCER
HEART DISEASE
DIABETES

THANA INSURANCE

ONLINE 24/7

100% TAX FREE MONEY

COVERAGE WILL START WITHIN 48 HOURS

PREMIUM NEVER INCREASE
COVERAGE UNTIL LIFE

NON MEDICAL LIFE INSURANCE

| AGE | 25000 | | 50000 | |
|---|---|---|---|---|
| | M | F | M | F |
| 60 | $79 | $69 | $154 | $132 |
| 65 | $103 | $89 | $202 | $173 |
| 70 | $141 | $116 | $276 | $227 |



Thana Manickavasagar
Insurance Broker

ASK THANA Cell : 416. 728. 5772 | Office: 416.519.3896

Address : 80 Nashdene Road, unit D218, Scarborough, ON, M1V 5E4



# எந்தக் கட்சியாவது ஏகபோக வெற்றியைப் பெறுமா?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

தமிழ் சிவில் சமூக அமையம் என்ற சிவில் அமைப்பு தேர்தலில் தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டும் விதத்தில் ஒரு அறிக்கையை வெளியிட்டிருந்தது. அந்த அறிக்கையில், தெனிலங்கை மையக் கட்சிகளுக்கு, குறிப்பாக தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்க வேண்டாம் என்ற கோரிக்கை உண்டு. அதே சமயம் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கொண்ட கட்சிகளில், கொள்கை மாறாத, கொள்கையில் உறுதியாக நிற்கின்ற, நேர்மையான கட்சிக்கு வாக்களிக்குமாறு அந்த அறிக்கை கேட்டிருந்தது.

அந்த சிவில் சமூகம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு ஒப்பீட்டளவில் நெருக்கமானது என்று தொடர்ச்சியாக அவதானிக்கப்பட்டு வந்துள்ளது. எனினும், கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ் பொது வேட்பாளருக்காக உருவாக்கப்பட்ட பொதுச்சபைக்குள் அந்த சிவில் சமூகம் முக்கிய ஒரு பங்கை வகித்தது. ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் என்ற தெரிவை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்றுக்கொள்ளவில்லை. அக்கட்சியின் நிலைப்பாட்டுக்கு எதிராகவே அந்த சிவில் சமூகம் பொது வேட்பாளரை முன்னிறுத்தியது.

இப்பொழுது நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான அந்த சிவில் சமூகத்தின் அறிக்கையானது எந்த ஒரு கட்சியையும் பெயர் குறிப்பிடாமல், நேர்மையான, கொள்கைகளில் வழுக்காத கட்சிகளுக்கு வாக்களிக்க வேண்டும் என்று கேட்டிருக்கின்றது. அதே சமயம் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கொண்டிருந்த போதிலும் கொள்கைளவில் தளம்புகின்ற அல்லது மக்களை ஏமாற்றக்கூடிய வாக்குறுதிகளை வழங்குகின்ற கட்சிகளை நிராகரிக்க வேண்டும் என்று தொனி அந்த அறிக்கையில் உண்டு.

அடுத்தது, பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான மக்கள் பேரியக்கம் வெளியிடப்பட்ட அறிக்கை. இந்த அறிக்கையும் தென்னிலங்கை மையக் கட்சிகளை நிராகரிக்குமாறு தமிழ் மக்களைக் கேட்டிருக்கிறது. குறிப்பாக தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்க வேண்டாம் என்று இந்த அறிக்கை கேட்கின்றது. அதேசமயம் தமிழ் தேசிய நிலைப்பாட்டை கொண்ட கட்சிகள் தொடர்பாகவும் அதில் விமர்சனங்கள் உண்டு. அந்த அறிக்கையும் ஏறக்குறைய கொள்கை ரீதியாக தளம்பாத கட்சிகளுக்கு வாக்களிக்குமாறு கேட்டிருக்கின்றது.

மூன்றாவது, தாயகத்துக்கு வெளியே புலம் பெயர்ந்த தமிழ் பரப்பிலிருந்து வெளிவந்த அறிக்கை. நாடு கடந்த தமிழீழ அரசு வெளியிட்ட அந்த அறிக்கையும் தேசிய மக்கள் சக்தி போன்ற தென்னிலங்கை மையக் கட்சிகளை நிராகரிக்குமாறு கேட்டிருக்கும் அதே சமயம், தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கொண்ட கட்சிகளுக்கு ஆதரவளிக்குமாறு கேட்டிருக்கின்றது.

மேற்குறிப்பிட்ட மூன்று அறிக்கைகளும் ஒரு விடயத்தில் தெளிவாக இருக்கின்றன. என்னவென்றால், ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்க வேண்டாம் என்று கேட்கும் அதே சமயம், தமிழ் தேசிய நிலைப்பாட்டை கொண்ட கட்சிகளில் ஏதாவது ஒன்றுக்கு வாக்களிக்குமாறு கேட்பது. இது தமிழர் தாயகத்தில் தற்பொழுது காணப்படும் "அனுர அலை"யை கவனத்தில் எடுத்து கூறப்பட்ட கருத்தாக இருக்கலாம்.

அனுர அலை என்ற ஒன்று தமிழ் பகுதிகளில் பலமாக உள்ளதா என்ற கேள்விக்கு விடை முக்கியம். ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் திருமதி சந்திரிக்கா ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பொழுது தமிழ் மக்கள் மத்தியில் ஒரு பலமான எதிர்பார்ப்பு இருந்தது. "சந்திரகா காப்பு", "சந்திரிக்கா சேலை", "சந்திரிக்கா கைப்பை" என்றெல்லாம் புது ரக உற்பத்திகள் விற்கப்படுகையில் அவற்றுக்கு சந்திரிகாவின் பெயர் வைத்து விற்கப்பட்டன. சந்திரிகா அளவுக்கு அனுரவின் பெயரால் பொருட்கள் விற்கப்படவில்லைத் தான். எனினும் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவாக அண்மையில் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் உட்பட படிப்பாளிகள் ஒரு தொகுதியினர் இணைந்து யாழ் ஊடக அமையத்தில் ஒரு ஊடகச் சந்திப்பை நடத்தினார்கள். தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்குமாறு கேட்பதுதான் அவர்களுடைய உள்நோக்கமாக இருந்தது. இதில் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழக விரிவுரையாளர்களில் பெரும்பாலானவர்கள் ஏற்கனவே ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பு அனுரவுக்கு வாக்களிக்குமாறு மறைமுகமாகக் கேட்டு ஒரு அறிக்கையை வெளியிட்டிருந்தார்கள் என்பதனை இங்கு சுட்டிக் காட்ட வேண்டும்.

எனவே இதுபோன்ற விடையங்களைக் கவனத்தில் எடுத்து, தமிழ் வாக்குகள் அனுரவை நோக்கிப் போகக் கூடாது என்ற கவலை அல்லது பயம் அல்லது முன்னெச்சரிக்கை தமிழ் மக்கள் மத்தியில் உள்ள புத்திஜீவிகள், கட்சிகள், அரசியல் செயற்பாட்டாளர்கள், கருத்துருவாக்கிகள், சிவில் அமைப்புகள் மத்தியில் உண்டு. இந்த முன்னெச்சரிக்கையைத் தான் மேற்சொன்ன மூன்று அறிக்கைகளும் வெளிப்படுத்துகின்றன.

சில நாட்களுக்கு முன் திருநெல்வேலி சந்தையில் ஒரு வியாபாரியிடம் கேட்டேன், "யாருக்கு வாக்களிப்பீர்கள்?" என்று. அவர் சற்று முன் ஒரு கட்சி கொடுத்து விட்டுப் போன பிரச்சாரத் துண்டு பிரசுரங்களை எனக்கு காட்டினார். "ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு கட்சி அல்லது பல கட்சிகள் வருகின்றன. எத்தனை சின்னங்கள்? எத்தனை கட்சிகள்? எத்தனை சுயேச்சைகள்? எத்தனை வாக்குறுதிகள்? யாரை நம்புவது? யாருக்கு வாக்களிப்பது? குழப்பமாக இருக்கிறது. இந்த சின்னங்களை எல்லாம் பார்த்து ஒரு சின்னத்தை தெரிவு செய்வதற்கு இடையில் சீவன் போய்விடும் போலிருக்கிறது. பேசாமல் வாக்களிக்காமல் விடலாமா என்றும் யோசிக்கிறேன்" என்று அவர் சலிப்போடு சொன்னார்.

சின்னங்களைப் பார்த்து கடைசி நேரத்தில்தான் சிந்தித்து முடிவெடுக்க வேண்டிய ஒரு நிலை ஏன் தோன்றுகிறது? கட்சிகளுக்கு மக்களுக்கும் இடையில் உயிருள்ள தொடர்ச்சியான பிணைப்பு, உறவு இல்லை என்பதைத்தான் அது காட்டுகின்றது.

மக்களில் ஒரு பகுதியினர் கட்சிகளின் விசுவாசிகளாக இருப்பார்கள். அந்த விசுவாசம் சில சமயம் தலைமுறை தலைமுறையாக வரும். குடும்ப வழியாக வரும். அவர்கள் ஏற்கனவே யாருக்கு வாக்களிப்பது என்று தீர்மானித்து விடுவார்கள். இன்னொரு தொகுதியினர் கடைசி நேரத்தில் முடிவெடுப்பார்கள். இலங்கை போன்ற நாடுகளில் பெரும்பாலும் கடைசி நேரத்தில் முடிவெடுக்கும் வாக்காளர்கள்தான் அதிகம் என்ற ஒரு அவதானிப்பு உண்டு. தேர்தல் பிரச்சாரத்தின் கடைசி கட்டம்தான் முடிவுகளைப் பெரிதும் தீர்மானிக்கிறது என்ற ஒரு அவதானிப்பும் உண்டு. நான் முன்பு சொன்ன மரக்கறி வியாபாரி அவ்வாறு கடைசி நேரத்தில் முடிவெடுக்கும் வாக்காளர்களில் ஒருவர்தான். இம்முறை அவ்வாறு கடைசி நேரத்தில் முடிவெடுக்கும் வாக்காளர்களின் தொகை அதிகரித்திருப்பதாகத் தெரிகிறது.

இதனால் தேர்தல் முடிவுகளை எதிர்வுகூற முடியாத ஒரு நிலைமை காணப்படுகிறது. ஜனாதிபதித் தேர்தலின்போது மேற்கத்திய தூதரக அதிகாரி ஒருவர் சொன்னார், "எதிர்வு கூற முடியாத, ஊகிக்க முடியாத ஒரு தேர்தல் களம்" என்று. நாடாளுமன்றத் தேர்தலிலும் அப்படித்தான் காணப்படுகிறது.

தேசிய மக்கள் சக்தி மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறாது என்ற அபிப்பிராயம் பொதுவாக உண்டு. அது அறுதிப் பெரும்பான்மை பெறுவதற்கும் சில நேரம் பேரங்களுக்கு போக வேண்டி வரலாம் என்ற ஊகங்களும் உண்டு.

அதே சமயம் தமிழர் தாயகத்தைப் பொறுத்தவரையிலும் தமிழரசுக் கட்சி அல்லது சங்கு ஒப்பீட்டளவில் அதிக ஆசனங்களை பெறலாம் என்ற ஊகங்கள் உண்டு. இவை யாவும் ஊகங்கள்தான். யாரும் முன்கூட்டியே உகிக்க முடியாத அளவுக்கு தேர்தல் களம் சிதறிப்போய் காணப்படுகின்றது. ஆனால், எந்த ஒரு கட்சியும் ஏகபோகமாக வெற்றிகளைப் பெறாது என்பது நிச்சயமாகத் தெரிகிறது. அதே சமயம் சுயேச்சைகளில் பெரும்பாலானவை ஆசனங்களை வெல்லப் போவதில்லை.

தேர்தலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு இந்த கட்டுரை எழுதப்படுகிறது. எல்லாத் தமிழ் தேசிய கட்சிகளும் தங்களுக்குத் தான் அதிக ஆசனங்கள், குறைந்தது பத்து ஆசனங்கள் கிடைக்கும் என்று கூறிக் கொள்கின்றன. எல்லாமே பேராசைதான்.ஆனால் எல்லாக் கட்சிகளுக்கும் தெளிவாகத் தெரியும், எந்த ஒரு தனி கட்சிக்கும் பத்து ஆசனங்கள் கிடைக்காது என்பது.




தமிழர் தேசிய நினைவெழுச்சி நாள்
THE INTERNATIONAL CENTRE | இன்ரர்நஷனல் சென்ரர்
6900 Airport Road, Mississauga, Ontario L4V 1E8
மாவீரர் துயிலும் இல்லம்
மாவீரர் நாள்
நவம்பர் 27-2024 - புதன்கிழமை
எங்களுக்காகத் தமிழீழ மண்ணுக்காகத் தமிழீழத் தேசியத்துக்காகத்
தமது உயிரை ஈந்த மாவீரர்களை வணங்கும் மாபெரும் வணக்க நிகழ்வு
Tamil National Heroes Day
To Remember Our Heroes'
who Sacrificed their Life for us,
for Our Treasured Land and Tamil Nationalism
றொறன்ரோ
27-11-2024
THE INTERNATIONAL CENTRE
6900 Airport Road
Mississauga
ON L4V 1E8
கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
வழமைபோன்று ஒரே இடத்தில் மூன்று நிகழ்வுகள்
1ஆம் நிகழ்வு: காலை 7:00 மணி
2ஆம் நிகழ்வு: மதியம் 1:00 மணி
3ஆம் நிகழ்வு: மாலை 6:00 மணி
மொன்றியல்
27-11-2024
புதன்கிழமை
மாலை 5:00 மணி
Le Château Royal
3500 Bd du Souvenir,
Laval, QC H7V 1X2
ஒட்டாவா
27-11-2024
புதன்கிழமை
மாலை 5:30 மணி
Nepean Sportsplex - Hall A
1701 Woodroffe Ave,
Nepean, ON K2G 1W2
Tell: 647-619-3619 mail: ctro@tamilremembrance.com / www.tamilremembrance.com / www.facebook.cm/tamilremembrance



Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற

# KANAGAAMBIKAI

## Pawn Brokers



30

வருட சேவைகள்

## வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க புதிய கிளை உதயம்!

# கனகாம்பிகை

## உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய

ஒரே கூரையின் கீழ்

உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...

**Pawn Bank Inc.™**

Your Satisfaction is Our Success

(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2

**416 269 7198**

(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2

**416 754 7198**

Plan Design Build



Paramount Custom Homes Ltd.
Quality comes first

Build your Dream Home With Us

RESIDENTIAL / COMMERCIAL CONSTRUCTION ✓
ARCHITECTURAL DRAWINGS ✓
OBTAINING BUILDING PERMITS ✓
REZONING ✓
LAND SEVERANCE ✓
FINANCING FOR CONSTRUCTION ✓

EXPERIENCE - 10 + YEARS



Check out our showroom at 2400 MIDLAND AVE. UNIT 106
TORONTO, ON. M1S 5C1

416-335-5885

TARION CERTIFIED BUILDER

REGISTERED BUILDER TARION WARRANTY CORPORATION TARION

# AQUA WELLNESS CENTRE LIMITED
REHABILITATION CLINIC


# INJURED?

CALL US TODAY
OVER 15 YEARS OF EXPERIENCE
IN PERSONAL INJURY.

- EXTENDED HEALTH CARE ( DIRECT BILLING )

- WSIB
- SLIP & FALL
- PRIVATE CLIENTS
- SPORTS INJURY
- MOTOR VEHICLE ACCIDENT

KENEDY AND SHEPPARD AVE. E
OFF KENNEDY ROAD.






AQUA WELLNESS CENTRE LTD.
100 COWDRAY COURT SUIT 140
TORONTO, ON. M1S 5C8

T: 416-463-9090 C: 647-972-7126
F: 416-363-9090

அச்சு ஊடகங்கள் எதிர்கொள்ளும் சவால்களை வெற்றிகொண்டு
கனடாவில் தொடர்ச்சியாக வெளிவரும்



# உதயன்

உதயன் பத்திரிகையின் 28வது ஆண்டு
பல்சுவைக் கலைவிழாவும்
நிதி சேர் இராப்போசன விருந்தும் . . .

# CANADA UTHAYAN's
# 28th Cultural Festival & Dinner Gala

Toronto Voice Of Humanity

## DEC. 14th 2024

இடம்:
Kennedy Convention Centre
1199 Kennedy Road, Scarborough
(Near Lawrence Ave.)
காலம்:
14-12-2024 சனிக்கிழமை
நேரம்: 6:00 PM

Guest Speaker from South India,
Film Director and Television Moderator
**Mr. Karu Palaniyappan**

சிறப்பு சொற்பொழிவாளராக, திரைப்பட இயக்குனரும்,
தொலைகாட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளருமாகிய
**கரு பழனியப்பன்**
கலந்து கொள்கின்றார்.
அத்துடன், இசை, மற்றும் நடனங்கள்

**For Tickets and Information: (416) 732-1608 or (647) 762-9512**


Latika Gold House
35 Karachi Dr Unit 37, Markham ON L3S 0B5
Ph: 647-996-5922 | 905-201-6000
www.latikagoldhouse.ca

COMPUTEK COLLEGE
Muraly Srinarayanathas, Chief Straegy Officer
2425 Eglinton Ave East Suite 400, Toronto, ON M1K 5G8
Tel: 416-321-9911 ext. 320
Fax: 416-775-9323
Markham Campus, 7 Eastvale Dr, Suite 202, Markham, ON L3S 4N8
Tel: 905-471-3344
muraly@computek.edu / www.computek.edu

VIBRANT HOSPITALITY GROUP
ONE OF CANADA'S FASTEST GROWING HOSPITALITY AND DEVELOPMENT GROUPS
OUR EXPERTISE: CONSTRUCTION & DESIGN, OPERATIONS, REVENUE MANAGEMENT, SALES & MARKETING, HUMAN RESOURCES

K T GROUP
PRESIDENT & CEO MR. KANA SELVA
647302 1189

Ontario approved Pawn Brokers
Pioneers and established leaders in the community
KANAGAAMBIKAI PAWN BROKERS
25 years of friendly, guaranteed and trusted service
Tel:- 416 269 7198
2613 Eglinton Ave. East, Scarborough, ON M1K 2S2

Chapel Ridge

நியூ ரங்கனாஸ்
2006 Bonus
New Ranganas Jewellery

CTS BUILDING SUPPLIES LTD
"providing the highest customer service"
416 840 4538
www.ctsbuildingsupplies.com
733 Progress Ave, Scarborough, On. M1H 2W7

WOODBINE ENTERTAINMENT GROUP
Thani Shanmuganathan

SANTHA
FULL SERVICE FACILITIES OF GENERAL CONTRACTORS
Santha
Tel: 416-200-5470
info@santha.ca
www.santha.ca

வீடு வாங்க விற்க
Excel Realty Ltd., Brokerage
Raj Nadarajah
Dir: 416.333.6115

CROSSROAD SHUTTLE BUS SERVICES
www.crossroadshuttles.com
647-801-7725

AMMA PAWN BROKER
அம்மா நகை அடைவு மையம்
CASH FOR GOLD
416-757-0034
416-994-3861

BUY | SELL | INVEST
RE/MAX
RAJEEV SEBARASHA
Dir: 905.226.8515

Residential & Commercial Real Estate Services
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

MAHAANS
PICK & PRESS OIL MILL
ORGANIC BULK STORE

Make Someone Smile
www.babuflorist.ca
BABUFLORIST LTD

LEGAL Think Tank
Tom Thiru
Think Tank Legal Services Corp.
211-1585 Markham Road, Toronto, ON M1B 2W1
Email: tom.tbond@gmail.com

வீடு வாங்க விற்க
Baskaran Sinnadurai
RE/MAX ACE
416 880 8585
1286 Kennedy Rd, Unit 3, Toronto, ON, M1P 2L5

BAVAN LOGA
BAVAN TRAVEL AND TOURS
POWERED BY CENTRE HOLIDAYS

FRUITS BABY
5925 Victoria, Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

RE/MAX COMMUNITY
Rajeev Koneswaran
416 568 1078
1265 Morningside Ave #203, Scarborough, ON M1B 3V9

JRB universal inc
R.R.Rajkumar
647-289-6164

Anjappar
Healthy and Traditional

N.K.S DRAPERY & BLINDS FABRIC
416 321 6420

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal - Corporation - New Home HST Filing
Selva Vettyvel
416 568 4301
905 471 4050
204-7 Eastvale Dr, Markham ON, L3S 4N8

First Mortgage
Second Mortgage
Private Mortgage
Commercial Mortgage
Mortgage Renewals
Home Equity Line of Credit
Dir: 416-908-5656 T. NESAN

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel: 647-344-6600

SRI NADARAJASUNDARAM
416-276-6666
RE/MAX ACE

CASH RUSSH

DF CREDIT SOLUTION
I AM HERE TO HELP YOU!
416.834.7227
Elankeeran. T

Jeya Jeyakanthan
Sales Representative


Media Partners
east FM 102.7
time FM
தேசம்
உலகத்தமிழர்
ஈழநாடு

கனடிய செய்திகள் Canadian News

# "கனடா வாழ் தமிழ் மக்கள் தங்கள் வாழ்க்கையிலும் சடங்குகளையும் நடத்துவதிலும் வெளிப்படைத் தன்மையைக் கடைப்பிடிப்பதைக் நான் பாராட்டுகின்றேன்"




## மொன்றியாலில் நடைபெற்ற தனது கவிதைத் தொகுதி அறிமுக விழாவில் கவிஞர் "ஆரணி" புகழாரம்



"நான் கனடாவிற்கு வருகை தந்து கடந்த இரண்டு மாத காலமாக இங்கு தங்கியிருந்து பல விழாக்களிலும் கலை இலக்கிய கூட்டங்களிலும் திருமணங்கள் மற்றும் அஞ்சலி நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு வருகையில் நான் அவதானித்த விடங்களில் முக்கியமாக, கனடா வாழ் தமிழ் மக்கள் தங்கள் வாழ்க்கையிலும் சடங்குகளையும் நடத்துவதிலும் மிகுந்த வெளிப்படைத் தன்மையைக் கடைப்பிடிப்பதைக் கண்டு நான் வியந்து பாராட்டுகின்றேன். மேலும் அவர்கள் கனடாவில் தமிழர் வாழ்வியல் பழந்தமிழர்வாழ்வியலை பாதுகாக்கும் பிரயத்தனத்தைக் காணமுடிகிறது.

எமது வாழ்க்கைமுறைச் சடங்குகளை, விழாக்களை நடத்துகிற பாங்கு மெய்சிலிர்க்கவைக்கிறது. ஒரு மரணச்சடங்கினைக்கூட அந்தச்சடங்கின் தார்ப்பரியம் பேணி ஒரு சீராக நடத்துகின்ற விதம் மற்றும் எதிர்காலக்கனடியத்தமிழ் சமூகத்திற்கு தமிழர் வாழ்வியலையும் அதன் சிறப்புகளையும் கடத்துமுகமாக அவர்களுக்கு கலைத்துறை, இலக்கியத்துறைகளில் ஈடுபடுத்தும் முயற்சிகளும் பாராட்டுக்குரியன. அத்துடன் இங்கு நடைபெறும் தமிழர் விழாக்களில் தமிழ் நுண்கலைகளுக்கு கொடுக்கின்ற முக்கியத்துவம் போன்றவற்றை நான் கண்டு ரசித்து அந்த இளைங்கலைஞர்களையும் பல தடவைகள் பாராட்டியுள்ளேன்.

மேலும் சில இலட்சம் சனத்தொகையினராகவும் புலம்பெயர்ந்து வாழும் ஒரு புதியவர்களாக விளங்கும் ஈழத்தமிழ்ச்சமுகம் தமக்கிடையே வாழுகின்ற தமிழ்வல்லோரை தரமறிந்து பாராட்டி அவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளரென காலத்தே செய்யப்பெறும் நன்றிக் கடனாக விருதுவழங்கிக்கௌரவிப்பதையும் கண்டு பெருமைகொள்கிறேன்.

மேலும் இங்குள்ள தமிழ்ப் பெற்றோரும் ஏனையோரும் தங்கள் பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும் தமிழ் மொழிக் கல்வியிலும் நுண்கலைகளிலும் அவற்றைக் கற்பதிலும் பங்குபற்றுவதிலும் ஆர்வங்கொள்ளச் செய்வதையும் நான் நேரடியாகக் கண்டு வியந்துள்ளேன். எனவே இந்த உயரிய அர்ப்பணிப்பின் காரணமாக கனடாவில் மெதுவாகவும் நேர்த்தியாகவும் தமிழ் வளர்கின்றது என்பதையும் நான் நன்கு உணர்கின்றேன்".

இவ்வாறு, தற்போது கனடாவிற்கு வருகை தந்துள்ள யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபரும் எழுத்தாளரும் கவிஞருமான "ஆரணி" அவர்களின் "நினைவிடைத் தோய்தல்" என்னும் கவிதைத் தொகுதியின் அறிமுக விழா மொன்றியால் அருள்மிகு திருமுருகன் ஆலய மண்டபத்தில் கடந்த 9ம் திகதி சனிழக்கிழமையன்று நடைபெற்றபோது அதில் நன்றி தெரிவித்து பதிலுரையாற்றிய நூலாசிரியர் புகழாரம் சூட்டினார்.





அத்தடன் இந்த மொன்றியால் அறிமுகவிழாவில் ரொறன்ரோ நகரிலிருந்து வந்துள்ள குழுவில் அங்கம் வகித்த அனைத்து வர்த்தக மற்றும் கலை இலக்கிய நண்பர்களுக்கும் விசேடமாக நன்றி தெரிவித்தார்.

மேற்படி கவிதை நூல் அறிமுகவிழாவிற்கு எழுத்தாளர் வீணைமைந்தன் சண்முகராஜா அவர்கள் தலைமை தாங்கினார். ஆசியுரையை மொன்றியல் அருள் மிகு திருமுருகன் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ வெங்கடேஸ்வரக் குருக்கள் ஆற்றினார். வாழ்த்துரைகளை திருமதி. வதனி ஸ்ரீஸ்கந்தராஜா மற்றும் திரு. உதயகுமார் ஆகியோர் வாழ்த்துரைகளை ஆற்றினார்கள். நட்புரை வாகீசன் நடராஜா அவர்கள் நிகழ்த்தினார். நூல் பற்றிய ஆய்வுரையை திருமதி. இளவரசி இளங்கோவன் நிறைவான ஒரு உரையாக வழங்கினார். மூர்த்தி செல்லையா அவர்கள் நூல் அறிமுகவுரையை ஆற்றினார். நூலாசிரியர் பற்றிய அறிமுகத்தை உதயன் பத்திரிகை ஆர்.என். லோகேந்திரலிங்கம் நிகழ்த்தினார். தொடர்ந்து விழாக்குழு சார்பில் நூலாசிரியர் யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபரும் எழுத்தாளரும் கவிஞருமான "ஆரணி" அவர்கள் கௌரவிக்கப்பெற்றார்.

தொடர்ந்து அங்கு வருகை தந்திருந்த வர்த்தகப் பிரமுகர் மற்றும் கலை இலக்கிய மற்றும் சமூகப் பணியாற்றும் நண்பர்கள் என பலருக்கு நூல் பிரதிகள் வழங்கப்பெற்றன.






# விபுலானந்தரும் வித்தியானந்தரும்

- பேராசிரியர் சி. மௌனகுரு -

## அறிமுகம்

------------

விபுலம் என்றால் அறிவு அல்லது புலமை என்று ஒரு அர்த்தம் உண்டு. அறிவின் ஆனந்தம் என்ற பொருளில் விபுலானந்தர் என்ற பெயர் அமைந்திருக்கிறது.

வித்தி என்பதிலேயே வித்தை என்று சொல் அமைந்திருக்கின்றது. வித்தை என்பதும் அறிவின் இன்னொரு பகுதி தான். அதற்கு புலமை என்று ஒரு அர்த்தம் உண்டு. எனவே புலமையின் ஆனந்தம் என்ற பொருளில் வித்தியானந்தர் என்ற பெயர் அமைந்துள்ளது. ஆனால் ஒருவர் பெயரை நாம் விபுலானந்தர் என அர்விகுதி கொடுத்து அழைக்கிறோம் இன்னொருவர் பெயரை அன் விகுதி கொடுத்து அழைக்கிறோம். சிவனையும் முருகனையும் கூடச் சைவப் பெருமக்கள் அன் விகுதி கொடுப்பதை இவ்விடம் நினைவு கூர்வோமாக பெயரின் இறுதியிலே ஆனந்தம் என்ற பெயரை இருவரும் கொண்டு ள்ளார்கள் புலமையிலே அறிவிலே ஆராய்ச்சியிலேயே ஆனந்தம் கண்ட இந்த இரு பெரியார்களையும் செயற்பாடுகளையும் எழுத்துக்களையும் ஒப்பிட்டுச் செய்யப்படும் ஆய்வு அவர்களைப் பற்றி மாத்திரம் அல்ல அவர்களின் காலப் பின்னணியையும் அக்கால சமூக உளவியலையும் கூட அறிந்து கொள்ள உதவும் இந்த ஆய்வு விரிவாகச் செய்யப்பட வேண்டிய ஒன்று.

அதற்கான முன்னுதாரணமாகவே இந்த சிறிய கட்டுரை அமைகிறது.

நாம் இக்கட்டுரையில் வித்தியானந்தனை வித்தியானந்தர் என விளித்தே எழுதுகிறோம்.





## காலப் பின்னணி

--------------------

விபுலானந்தரும் வித்தியானந்தரும் இரண்டு வேறு காலகட்டத்திலே வாழ்ந்த இரு பெரும் ஆளுமைகள். இந்த இரு பெரும் ஆளுமைகளையும் உருவாக்கிய காலச் சூழல் வெவ்வேறானவை. விபுலானந்தர் 1892 ஆம் ஆண்டு பிறந்தார் 1947 ஆம் ஆண்டு காலமானார் 55 வருடங்கள் உலகில் வாழ்ந்தார்.

வித்தியானந்தரை உருவாக்கிய காலச் சூழல் வேறு அவர் 1924 ஆம் ஆண்டு பிறந்தார் 1989 ஆம் ஆண்டு காலமானார் 65 வருடங்கள் உலகில் வாழ்ந்தார்.

விபுலானந்தரின் மாணவர் வித்தியானந்தர், இளைஞரான வித்தியானந்தன் விபுலாந்தரைச் சந்தித்தகாட்சிகள் எப்படி இருந்திருக்கும் என யோசித்துப் பார்க்கிறேன் விபுலானந்தரும் வித்தியானந்தரும் சந்தித்தபோது விபுலானந்தருக்கு வயது 51 வித்தியானந்தருக்கு வயது 20 விபுலானந்தர் காலம் தமிழ் நாட்டில் தமிழ் மொழி உணர்வு தோன்றிய காலம், தமிழ் ஆராய்ச்சியின் ஆரம்பகாலம் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் அச்சுவாகனம் ஏறிவிட்ட காலம் அது எழுத்து வடிவில் பரவலான காலம் அதையொட்டி ஆராய்வுகளும் எழத் தொடங்கிய காலம் வடமொழியும் தமிழ்மொழியும் சமமாக தமிழர் பலரால் ஏற்கப்பட்ட போதும் தமிழின் மேன்மைகளும் தொன்மைகளும் அழுத்திப் பேசப்படத் தொடங்கிய காலம் அது. அன்னியர் ஆட் சியான ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ்க் குறிப்பாக இந்தியாவும் சிறப்பாக தமிழகமும் இருந்த காலம் அக்காலம்.

வித்தியானந்தர் வாழ்ந்த காலம் தமிழ்மொழி இன்னும் வளர்ந்திருந்த காலம் தமிழ் ஆராய்ச்சி பல வகைகளில் வளர்ந்து வந்த காலம். ஒரு அரசியல் இயக்கமாக தமிழ்மொழி உணர்வு வடிவம் பெற்ற காலம், தமிழகத்தில் திராவிடக் கழகம் ஆரம்பமாகி வளர்ந்த காலம். அந்நிய ஆட்சி அகன்று சுதந்திர இலங்கை உருவாகி இருந்த காலம். சிங்கள மொழி அரசகரும மொழி ஆக்கப்பட்டுத் தமிழர்கள் தமது மொழி உரிமைச் சமத்துவம் வேண்டிக் குரல் கொடுத்த மொழி உரிமைப்போர் நடந்த முக்கியமான காலம் வித்தியானந்தர் வாழ்ந்த காலம்.

இந்த இரண்டு காலச் சூழலையும் இந்த இரண்டு பெரியார்களும் எதிர்கொண்ட விதம் சுவராசியமானது.

## பல்கலைக்கழகத்தில்

------------------------

இரண்டு பேருமே தமிழ்ப் பேராசிரியர்கள். தமிழையும் சங்க இலக்கியங்களையும் குறிப்பாக ஏனைய பண்டைத் தமிழ் இலக்கியங்களையும் துறை போகக் கற்றவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறை தலைவராக ஆரம்பத்தில் விபுலானந்தர் இருந்தார் பின்னாளிலே பேராசிரியர் வித்தியானந்தன் அந்த நாற்காலியை அலங்கரித்தார்.

பல்கலைக்கழகத்திற்கான தமிழ்ப் பாட திட்டங்களை விபுலானந்தர் அமைத்துக் கொடுத்தார் ஆயினும் அதை வளர்த்தெடுக்கின்ற பணியிலே தனது ஆசிரியரான பேராசிரியர் கணபதிப்பிள்ளையுடனும் செல்வநாயத்துடனும் சேர்ந்து உழைத்ததுடன் தன் காலத்தில் அத்திட்டத்தை மேலும் விரிவு படுத்தி எடுத்தவர் வித்தியானந்தன் ஆவர்.

விபுலானந்தர் பழம் தமிழ் இலக்கித்துடன் மட்டும் நின்றாரில்லை நவீன இலக்கிய காரனாக பாரதியாரைக்காட்டி அக்கருத்தை மக்கள் முன் கொண்டு சென்றவர் விபுலானந்தர்.

வித்தியானந்தரும் பழம் தமிழ் இலக்க்கியத்துடன் நின்றாரில்லை நவீன இலக்கிய காரனாக பாரதியாரின் சீடர் பாரதி தாசனின் பாடல்களில் ஈடுபாடுடையவர், பாரதி தாசனின் பாடல்களும் அவரது புரட்சிக் கவி பா நாடகமும் தமிழ் சிறப்புப் பயின்றோர்க்கு பாட நூலாக அறிமுகம் செய்ததில் வித்தியானந்தருக்கு அதிக பங்கு உண்டு என்பர்.

விபுலானந்தரின் ஆய்வுத்துறை தமிழ்க் கலைகளாக இருந்தாலும் அது மையம் கொண்டிருந்தது இசைத்துறை ஆகும் அதிலும் தமிழருக்கான இசையை அவர் தேடினார். தமிழ் இசை வரலாற்றை பண்டைய இலக்கியங்களிலிருந்து முக்கியமாக நிலம் சார்ந்த பண்ணிலிருந்து ஆரம்பித்தார். அவர் அதன் வளர்ச்சியாகவே அவர் சிலப்பதிகார இசைக்குள் வந்தார் பின் தேவார இசைகளுக்குள் சென்றார், தமிழருக்கான இசையின் மூல வேர்களைத் தொட்டுக்காட்டினார், பண்ணிசையே தமிழிசை என்றார் அதன் வெளிப்பாடு யாழ் நூலாகும்

வித்தியானந்தருடைய ஆய்வுத்துறை தமிழ் இலக்கியமாக இருந்தாலும் அந்த ஆய்வோடு தமிழ்க் கலைகளையும் சேர்த்துக் கொண்டார். சிறப்பாக அவர் ஈழத் தமிழருக்கான நாடகத்தைத் தேடினார். சங்க இலக்கியங்களிலே அதன் மூல ஊற்றுக்களைக் கண்ட அவர் அதன் தொடர்ச்சியாகவும் வளர்ச்சியாகவும் தமிழ்க் கூத்துகளைக்கண்டார், அவருடை கூத்தாய்வுகள் ஈழத்தை மையம் கொண்டிருந்தன அதனுடைய வெளிப்பாடுகள் அவருடைய கட்டுரைகளும் அவர் தயாரித்த கூத்துகளும் அவர் உருவாக்கி விட்ட மாணவர்களும் ஆகும்.

## இசைத் தமிழும் நாடகத் தமிழும் யாழும் கூத்தும் மீளுருவாக்கம்

--------------------------------------------------

பண்டைய தமிழரின் யாழ்களைத் தேடிச் சென்ற விபுலானந்தர் அவற்றை தனது நூலிலே வரைந்தும் வைத்திருக்கிறார். ஒரு வகையில் அது ஓர் யாழ் மீளுருவாக்கமாகும்வில்யாழ், சகோட யாழ், பேரியாழ், மகரயாழ் என அவர் பல யாழ்களை தமிழருக்கு உரியதாக வடிவமைத்தார் அதே போலப் பண்டைய தமிழரின நாடகங்களைத் தேடிச் சென்ற வித்தியானந்தர் அந்த நாடகங்களின் மூல ஊற்றுக்களாகக் கூத்துக்களைக் கண்டறிந்தார்யாழ் வகைகளை விபுலானந்தர் உருவாக்கியது போல வித்தியானந்தரும் கூத்து வடிவங்களை உருவாக்கிக் காட்டினார், ஒரு வகையில் தமிழ் கூத்துகளை மீளுருவாக்கினார் அதற்கு உதாரணமாகத் திகழ்பவை அவரால் தயாரிக்கப்பட்ட வடமோடிக் கூத்துக்களான கர்ணன் போர் இராவணேசன் வாலி வதை ஆகியனவும் தென்மோடிக் கூத்தான நொண்டி நாடகமும் ஆகும்.

## தமிழ் எழுத்தாளர்களுடன்

--------------------------------

ஈழத்தில் தமிழ் எழுத்தாளர் சங்கம் ஒன்று ஆரம்பித்தார் பேராசிரியர் விபுலானந்த அடிகளார். அதேபோல ஈழத்து தமிழ் இலக்கியம் நாடகம் கலை என்று பேசியதோடு ஈழத்து எழுத்தாளர் சங்கத்தின் தலைவராக இருந்து எழுத்தாளர்களோடு 1940 களிலே நெருங்கிய உறவை வைத்துக்கொண்டார்.

பல்கலைக்கழக பேராசிரியரான வித்தியானந்தனும் அன்றைய எழுத்தாளர்களோடு நெருக்கமான உறவுகளை வைத்திருந்தார் விசேடமாக 1963 ஆண்டிலே யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் உரையாற்றியதுடன் இளங்கீரன் நடத்திய மரகதம் வெளிவர மிகவும் உதவியாக இருந்தார்.

## கண்ணகி வழக்குரையும் கூத்தும்

---------------------------------------

விபுலானந்தர் பிறந்த இடம் மட்டக்களப்பு காரைதீவு. அங்கு ஒரு பழம் பெரும் கண்ணகி அம்மன் கோவில் உண்டு. கண்ணகி அம்மன் வழிபாடு அவரை மிகவும் கவர்ந்தது. அங்கு பாடப்படும் கண்ணகி வழக்குரைகாவியம் மீது அவர் கொண்ட காதல் தான் அவரைச் சிலப்பதிகாரத்தின் மீது கவனம் செலுத்த வைத்தது அதன் விளைவு யாழ் நூல்.

வித்தியானந்தர் பிறந்த இடம் யாழ்ப்பாணம் தெல்லிப்பளை ஆகும் அவருக்கு அயல் கிராமமான காங்கேசன் துறையில் ஆடுகின்ற கூத்துக்களையும் முக்கியமாக இசை நாடகங்களையும் பார்க்கும் வாய்ப்பு அவருக்குச் சிறு வயதிலேயே வாய்த்திருக்கிறது. தனது சிறுவயதில் அந்த கூத்துக்கள் மீது அவர் கொண்ட காதலின் விளைவே அவரது கூத்துப் பணிகளாகும்.

மட்டக்களப்பில் பிறந்த விபுலானந்தர் யாழ்ப்பாணம் சென்று பணி செய்தது போல யாழ்ப்பாணத்தில் பிறந்த வித்தியானந்தர் மட்டக்களப்பு வந்து கூத்து கலைஞர்களையும் அண்ணாவிமார்களையும் தேடிச் சென்று கூத்தை வெளி உலகுக்கு அறிமுகம் செய்து பணியாற்றி இருக்கின்றார்.

## அரசியல் ஈடுபாடுகள்

------------------------


இருவருமே அரசியல் ஈடுபாடு மிகுந்தவர்களாக இருந்திருக்கிறார்கள் விபுலானந்த அடிகளார் அந்நிய ஆட்சிக்கு எதிராக தேசிய இயக்கங்களோடு தொடர்கொண்டிருந்திருக்கிறார் காங்கிரஸின் அந்நிய எதிர்ப்புப் போராட்டத்திற்கு ஆதரவு தந்திருக்கிறார் காங்கிரஸ் கொடியைத்தன் வீட்டு முன்னால் பறக்க விட்டு அந்நிய எதிர்ப்பை ஆங்கிலேய அடக்குமுறை எதிர்ப்பை அந்த நாளிலேயே காட்டியிருக்கிறார்.

வித்தியானந்தர் தமிழரசுக் கட்சியின் மீது ஈடுபாடு மிக்கவராக இருந்திருக்கின்றார். அந்த கட்சி தலைவர்கள் இவர் மீது மிகுந்த மரியாதை வைத்திருக்கிறார்கள் 1956 இலே காலிமுகத் திடலில் சத்தியாக் கிரகப் நடந்த போராட்டத்தில் தொடர்புற்றிருக்கிறார், யாழ்ப்பாணத்தில் ஆண்டு தமிழ் ஆராய்ச்சி மாநாடு ஒன்றை அன்றைய அரசுக்கு எதிராக அவர் நடத்தியும் இருக்கிறார்.

## புறநிலை நின்று தமிழ் ஆய்ந்தமை

----------------------------------------

விபு லானந்தர் வாழ்ந்த காலத்திலேயே அவர் தமிழ் பற்றி எழுதிய கட்டுரைகள் ஏனைய தமிழ் பண்டிதர்களின் கட்டுரைகளை அவர்களது தமிழ் ஆய்வை விட மிகவும் வித்தியாசமாக இருந்தன. ஆங்கிலத்தில் புலமைமிக்க அவர் மேற்கு நாட்டு ஆய்வு முறைகளை ஓரளவு கையாண்டு தன்னுடைய ஆராய்வுகளை புறநிலை ஆய்வுகளாகச் செய்தி ருக்கின்றார். ஆங்கில இலக்கியங்களோடும் வடமொழி இலக்கியங்களோடும் தமிழை ஒப்பிட்டு ஓர் ஒப்பீட்டு இலக்கிய ஆய்வாளராகவும் திகழ்ந்திருக்கிறார்.







வித்தியானந்தருடைய கலாநிதிப்பட்ட ஆய்வு இங்கிலாந்துப் பல்கலைக் கழகமொன்றில் செய்யப்பட்டது முனைவர் பட்டப் பேற்றுக்காக பதிற்றுப்பத்தை ஆய்வுப் பொருளாக எடுத்த அவர் அதனை ஆங்கில வடிவில் முடங்கிப்போக விடாமல், "தமிழர் சால்பு" எனும் தலை சிறந்த தமிழ் நூலாக மறுவரைவு செய்து தந்தார். இந்நூல், தமிழர் வரலாற்றின் தொடக்க காலப் பண்பாட்டைத் தெளிவாக ஆய்வு செய்து வெளிப்படுத்தியது.

(தொடர்ச்சி 17 பக்கம்)

# அமையப்போகும் புதிய பாராளுமன்றத்தின் முதல் நாள் அமர்வில் நடக்கப்போவது என்ன?

## "சபாநாயகர், பிரதி சபாநாயகர் தெரிவுகள், புதிய எம்.பி.க்களின் உறுதியுரை ஏற்பு, ஜனாதிபதயின் கொள்கை பிரகடன உரை இடம்பெறுவது எவ்வாறு..?"



இலங்கையின் 10 ஆவது பாராளுமன்றத்திற்கான தேர்தல் 14 ஆம் திகதி நடந்து வாக்களிப்பு தற்போது நடைபெற்று முடிந்துள்ளது. இந்த தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 5006 வேட்பாளர்களும் 3346 சுயேச்சைக்குழு வேட்பாளர்களும் என 8352 வேட்பாளர்கள் போட்டியிட்ட நிலையில் மக்களின் வாக்குகளினால் 196 பேரும் தேசியப் பட்டியல் ஊடாக 29 பேருமென 225 பிரதிநிதிகள் பாராளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

இவ்வாறான நிலையில் இலங்கையின் 10 ஆவது புதிய பாராளுமன்றம் எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கூடவுள்ளது. முதலாவது அமர்வுநாளில் சபாமண்டபத்தில் இடம்பெறும் செயற்பாடுகளில் பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கே பிரதான பொறுப்புக் காணப்படுகிறது. முதலாவது நாளில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக விசேடமான ஆசன ஒதுக்கீடுகள் எதுவும் இருக்காது என்பதுடன், விரும்பிய ஆசனத்தில் அமர்வதற்கான வாய்ப்புக் கிடைக்கும்.

செங்கோல் சபா மண்டபத்தில் வைக்கப்பட்ட பின்னர் பாராளுமன்றம் கூட்டப்படவேண்டிய நாள் மற்றும் நேரம் அடங்கிய ஜனாதிபதியின் அறிவிப்பு வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு பாராளுமன்ற செயலாளர்நாயகத்தினால் வாசிக்கப்படுவது முதலாவது விடயமாக சபையில் முன்னெடுக்கப்படும்.

அதன் பின்னர் அரசியலமைப்பின் 64(1) உறுப்புரை மற்றும் நிலையியற் கட்டளை இலக்கம் 04, 05 மற்றும் 06 ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் சபாநாயகரை வாக்களின்பின் மூலம் நியமித்தல், சபாநாயகரின் பதவிச்சத்தியம் அல்லது உறுதியுரை, பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவிச்சத்தியம் அல்லது உறுதியுரை அதன் பின்னர் பிரதி சாபாநாயகரும் குழுக்களின் தலைவரும், குழுக்களின் பிரதித்தவிசாளர் ஆகியோர் வாக்கெடுப்பின் மூலம் தெரிவுசெய்வது இடம்பெறும்.

### சபாநாயகர் நியமனம்

பாராளுமன்றத்தில் உள்ள எந்தவொரு உறுப்பினரையும் சபாநாயகராகத் தெரிவுசெய்து நியமிக்கமுடியும். எனினும், உறுப்பினர் குறித்த முன்மொழிவுக்கு அமைய தேர்ந்தெடுக்கப்பட்டால் அந்த உறுப்பினர் சபாநாயகராகச் சேவையாற்றுவதற்கு விரும்புகின்றாராவென்பதை முன்கூட்டியே நிச்சயப்படுத்திக் கொள்ளல் வேண்டும். எவராவது உறுப்பினர் ஒருவரின் பெயரை சபாநாயகராகத் தெரிவுசெய்யுமாறு உறுப்பினர் ஒருவர் முன்மொழிந்து மற்றொருவர் வழிமொழியவேண்டும் என்பதுடன், இது தொடர்பில் விவாதம் மேற்கொள்ள முடியாது.

முதலில் சபாநாயகர் ஒருவரைத் தெரிவு செய்யவேண்டும் என செயலாளர் நாயகம் சபைக்கு அறிவிக்க வேண்டும். இதன்போது எவராவது ஓர் உறுப்பினர் தனது ஆசனத்திலிருந்து எழுந்து நின்றால் குறித்த உறுப்பினரின் பக்கம் செயலாளர் நாயகம் பார்த்து நிற்க அந்த உறுப்பினரின் யோசனை சபைக்கு முன்வைக்கப்படும். ஒருவருடைய பெயர் முன்மொழியப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் வேறு நபர்களின்பெயர்கள் உள்ளனவா என செயலாளர் நாயகம் சபையிடம் வினவுவது கட்டாயமாகும்.

அவ்வாறு வினவும்போது பிறிதொரு நபரின் பெயர் முன்வைக்கப்பட்டிருக்காவிட்டால் குறித்த உறுப்பினர் சபாநாயகராகத் தெரிவுசெய்யப்படுவார். இந்தச் சந்தர்ப்பத்தில் குறித்த உறுப்பினரின் பெயரை முன்மொழிந்த மற்றும் வழிமொழிந்த உறுப்பினர்கள் இருவரும் கையில் பிடித்துச் சென்று அவரை அக்கிராசனத்தில் அமர்த்துவது வழமையாகப் பின்பற்றப்படும் சம்பிரதாயமாகும்.

அதனைத் தொடர்ந்து சபாநாயகரினால் பதவிச்சத்தியம் அல்லது உறுதியுரை மேற்கொள்ளப்படவேண்டும் என்பதுடன், இதனை பாராளுமன்ற செயலாளர் நாயகம் மேற்கொண்டு வைப்பார். இவ்வாறு பதவிச்சத்தியம் செய்துகொண்ட சபாநாயகர் அக்கிராசனத்தில் அமர்வதற்கு முன்னர் தான் தெரிவுசெய்யப்பட்டமைக்கு நன்றி தெரிவித்து சிறியதொரு உரையாற்றுவதும் சம்பிரதாயம். தெரிவுசெய்யப்பட்ட புதிய சபாநாயகருக்கு ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், சபாநாயகரும் நன்றி தெரிவித்து உரையாற்றுவார். அதன் பின்னர் சபாமண்டபத்திலுள்ள சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் பதவிச்சத்தியம் அல்லது உறுதியுரைஎடுத்துக்கொள்வர்.

சபாநாயகர் பதவிக்கு இரண்டு உறுப்பினர்களின் பெயர்கள் முன்மொழியப் பட்டிருந்தால் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படும். இவ்வாறு இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படும் சந்தர்ப்பங்கள் இரண்டு பாராளுமன்ற முறைமையில் காணப்படுகின்றன. அவையாவன, சபாநாயகர் தெரிவு, பிரதிச்சபாநாயகர் தெரிவு, குழுக்களின் பிரதித் தலைவர் தெரிவு போன்றவற்றின் போதும், பாராளுமன்றத்தின் ஊடாக ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் சந்தர்ப்பதிலுமாகும்.

அவ்வாறான வாக்கெடுப்பின் போது ஐந்து நிமிடங்கள் வாக்கழைப்பு மணி ஒலிக்கப்பட்டு வாக்கெடுப்பு நடத்தப்படும். இதற்காக சபையில் சமுகமளித்திருக்கும் உறுப்பினர்களுக்கு செயலாளர் நாயகரிடமிருந்து வாக்குச் சீட்டொன்று வழங்கப்படும். இந்த வாக்குச்சீட்டில் சபாநாயகராகத் தெரிவுசெய்ய விரும்பும் நபரின் பெயர் மற்றும் வாக்களிக்கும் உறுப்பினரின் கையொப்பம் என்பன இடப்பட்டு வெளியில் தெரியாதவாறு மடிக்கப்பட்டு வாக்குப்பெட்டியில் இடவேண்டும்.

வாக்களிப்புநடத்தப்படும்முறை மற்றும் வாக்குகளின் எண்ணிக்கையை மேற்கொள்வதற்கான பொறுப்பு பாராளுமன்ற செயலாளர் நாயகத்தையே சாரும். செயலாளர் நாயகத்தின் மேசையிலேயே (Table of Parliament) வாக்குகள் எண்ணப்படும். மேசையில் வாக்குகள் எண்ணப்பட்டதும், அதன் முடிவுகள்சபைக்கு அறிவிக்கப்படும். எதாவது ஒரு சந்தர்ப்பத்தில் வாக்குச்சீட்டில் வாக்களித்த பாராளுமன்ற உறுப்பினரின் கையொப்பம் இடப்பட்டிருக்காவிட்டால் அவை செல்லுபடியற்ற வாக்குகளாகக்கணக்கெடுக்கப்படும்.

சபாநாயகர் பதவிக்கு மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் முன்மொழியப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் குறைந்த வாக்குகளைப் பெற்ற உறுப்பினரின் வாக்குகள் நீக்கப்பட்டு மீண்டும் வாக்கெடுப்பு நடத்தப்படும். இதன் பின்னர் நடத்தப்படும் வாக்கெடுப்பில் கூடிய வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் சபாநாயகராகத் தெரிவுசெய்யப்படுவார். அதேநேரம், பல பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் சபாநாயகர் பதவிக்கு முன்மொழியப்பட்டிருந்தால் மேலே குறிப்பிடப்பட்டது போலஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் குறைந்த வாக்குகளைப் பெற்ற உறுப்பினர்களின் வாக்குகள் நீக்கப்பட்டு எஞ்சிய உறுப்பினர்களுக்கிடையில் மீண்டும் மீண்டும் வாக்கெடுப்பு நடத்தப்படும். இறுதியில் அதிகவாக்குகளைப் பெறும் உறுப்பினர் சபாநாயகராகத் தெரிவுசெய்யப்படுவார்.

ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் மூன்று உறுப்பினர்கள் போட்டியிடும்போது இரண்டு உறுப்பினர்களுக்கு மத்தியில் சம எண்ணிக்கையிலான வாக்குகள் கிடைக்கப் பெற்றிருந்தால், சமமான வாக்குகள் உள்ள அவ்வேட்பாளர்களுக்கிடையே எவர் விலக்கப்பட வேண்டியவர் என்பது செயலாளர் நாயகத்தினால் தீர்மானிக்கக்கூடியவாறான திருவுளச் சீட்டின்மூலம் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும்.

இரண்டு உறுப்பினர்கள் மத்தியில் வாக்கெடுப்பு நடத்தப்படும் சந்தர்ப்பத்தில் போட்டியிடும் இருவரும் சமமான வாக்குகளைப் பெறும் சந்தர்ப்பத்தில் மீண்டும் வாக்கெடுப்பு நடத்தப்படும். இருந்தபோதும் அந்தச் சந்தர்ப்பத்திலும் அவர்கள் இருவரும் சமமான வாக்குகளைப் பெற்றுக்கொண்டால் யாரைசபாநாயகராகத் தெரிவுசெய்வது என்பதை திருவுளச் சீட்டின் மூலம் தீர்மானிக்கும் பொறுப்புபாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்குக் காணப்படுகின்றது. இதில் திருவுளச் சீட்டு போடும் முறை பற்றித் தீர்மானிக்கும் உரிமையும் செயலாளர் நாயகத்துக்குக் காணப்படுகின்றது.

வாக்கெடுப்பிற்குப் பயன்படுத்தப்பட்ட வாக்குச்சீட்டுக்களை ஆகக் குறைந்தது ஒரு மாதகாலம் பாதுகாப்பாகவும் இரகசியமாகவும் பேண வேண்டியதும், பாராளுமன்றத்திடமிருந்து பெறக்கூடிய ஏதேனும் பணிப்பிற்கமைய செயலாளர் நாயகம் வாக்குச்சீட்டுப் பத்திரங்களை அழித்துவிட்டு அதனைப் பாராளுமன்றத்திற்குச் சான்றுப்படுத்தலும் செயலாளர் நாயகத்தின் கடமையாகும்.

பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் அனைவரும் முதலாவது பாராளுமன்ற நாள் அமர்வில் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர் அட்டவணை எனும் புத்தகத்தில் கையொப்பமிடுதல் வேண்டும். இதில் சபாநாயகர் முதன்முதலில் கையொப்பமிடுவார் என்பதுடன், அடுத்து பிரதமர் கையொப்பமிட்டதும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் அதில் கையொப்பமிடுவது சம்பிரதாயம். இந்தப் பெயர் அட்டவணைப் புத்தகம் பாதுகாப்பான ஆவணமாகப் பேணப்படும்.

முதலாவது பாராளுமன்ற அமர்வு தினத்தில் பிரதி சபாநாயகரும் குழுக்களின் தவிசாளர் மற்றும் குழுக்களின் பிரதித் தவிசாளர் ஆகிய பதவிகளுக்கு உறுப்பினர்களைத் தெரிவுசெய்ய வேண்டும். இவர்களின் தெரிவுகள் இடம்பெறும்போது சபாநாயகர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டு அக்கிராசனத்தில் இருப்பதனால் குறித்த அறிவிப்பு மற்றும் வாக்கெடுப்புப் போன்றன சபாநாயகரின் தலைமையிலேயே முன்னெடுக்கப்படும்.

பிரதி சபாநாயகரும் குழுக்களின் தவிசாளர் பதவிக்கு ஒருவருடைய பெயர் முன்மொழியப்பட்டிருந்தால், வேறு எவரினதும் பெயர்கள் முன்மொழியப்படுகின்றனவா என சபையிடம் வினவவேண்டிய பொறுப்பு சபாநாயகருடையதாகும். அவ்வாறு வேறு பெயர்கள் முன்மொழியப்படாவிட்டால் குறித்த உறுப்பினர் பிரதி சபாநாயகர் பதவிக்குத் தெரிவுசெய்யப்படுவார்.

ஏதாவது சந்தர்ப்பத்தில் இந்தப் பதவிகளுக்காக வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டி ஏற்பட்டால் சபாநாயகரின் தெரிவின்போது பின்பற்றப்பட்ட வாக்களிப்புமுறை பின்பற்றப்படும். இதன்போது வாக்கெடுப்பு நடத்தப்படுவது பற்றிய அறிவிப்பை வெளியிடுவது செயலாளர் நாயகத்திற்குப் பதிலாக சாபாநாயகர் என்பது விசேடமாகும்.

மேலே குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் பூர்த்தியடைந்ததும் முதல்நாள் அமர்வுகள் ஒத்திவைக்கப்படும். ஒத்திவைக்கப்படும் நாள் பெரும்பாலும் அடுத்த பாராளுமன்ற அமர்வு நாளாகவிருக்கும். இருந்தபோதும், அரசியலமைப்பின் 33ஆவது உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைய ஜனாதிபதியினால் அன்றையதினம் பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் கொள்கைப் பிரடகன உரை நிகழ்த்தப்படுவதாயின், முதல் நாளின் பிரதான பணிகள் முடிவுக்கு வந்ததும் தற்காலிகமாக சபை ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் கூடும்போது ஜனாதிபதி பாராளுமன்றத்திற்குத் தலைமைதாங்கி கொள்கைப் பிரகடன உரையை நிகழ்த்த முடியும்.

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரையைத் தொடர்ந்து ஜனாதிபதி பாராளுமன்றத்தை அடுத்த அமர்வு தினத்துக்கு ஒத்திவைப்பார்.

(16 பக்கத் தொடர்ச்சி)

# விபுலானந்தரும் வித்தியானந்தரும்

தமிழர் சால்பு சங்க காலத் தமிழர்கள் பற்றியதாக அவர்கள் வாழ்வியல் பற்றியதாக அது அமைந்துள்ளது அக்காலத்திலே சங்ககாலம் பற்றி வந்த எழுத்துக்களில் இருந்து வித்தியானந்தனுடைய தமிழர் சார்பு மிகவும் வித்தியாசமாக இருக்கின்றது அது ஒரு விஞ்ஞான ரீதியான ஆய்வாகவும் சங்க இலக்கியங்களை அடிப்படையாக வைத்து ஒரு வாழ்க்கை முறையை கூறுவதாகவும் புராதான தமிழரின் சமயம் பண்பாடு பழக்கவழக்கம் விளையாட்டு தொழில் என்ற பலதரப்பட்ட விடயங்களையும் தருவதாகவும் அந்த நூல் அமைந்திருக்கின்றது. தன் எழுத்துகள் மூலம் அவர் யாழ்நூலில் காட்டும் முல்லை நிலத்தில் இசை தோன்றிய விதம் பற்றிய செய்திகள் படிதின்புறத் தக்கன யாழ் நூலும் அவ்வாறே பண்டைய தமிழரின் கலை வாழ்வின் ஒரு பக்கத்தை அவரகள் கையாண்ட இசையின் ஆழ அகலங்களைத் தெளிவாகக் காட்டுவதாக அமைந்துள்ளதுயாழ் நூல் ஒரு முகம் காட்டினால் தமிழர் சார்பு இன்னொரு முகம் காட்டும். ஒன்றினது தொடர்ச்சியாகவும் ஒன்றினது வளர்ச்சியாகவும் இவை இரண்டும் அமைந்திருப்பதனை இவ்விரு நூல்களையும் அருகில் வைத்து பார்ப்போருக்குச் சுலபமாக விளங்கும்.

**உடை அடையாளம்**

விபு லானந்தரின் தோற்றத்தை ஒரு தடவை கற்பனை பண்ணிப் பாருங்கள் காவி உடை அவரது அடையாளம். வித்தியானந்தரின் தோற்றத்தையும் ஒரு தரம் கற்பனை செய்து பாருங்கள். தமிழ் தேசிய உடையும் கழுத்தைச் சுற்றி போட்ட சால்வையும் அவரது அடையாளம்.

இவ்விரண்டும் வேறு வேறாகக் காண்ப்பட்ட போதும் இவை அவர்களது அடியாளங்கள் எனலாம்.

**விழிம்பு நிலை மக்கள் உறவு**

விபுலானந்தர் தமிழ் நாட்டிலே வாழ்ந்த போது திருவேட்களம் என்னும் ஊரிலேயே உள்ள தாழ்த்தப்பட்ட மக்களிடையே சென்று வேலை செய்து இருக்கிறார், அவர்களை மேலே கொண்டு வருவதில் அரும் பாடு பட்டிருக்கிறார். உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற பேதம் சிறப்பாக இந்தியப் பண்பாட்டிலும் குறிப்பாகத் தமிழ்ப் பண்பாட்டிலும் இல்லையென்ற மானுட சமரச எண்ணம் அவர் எழுத்துக்களில் மாத்திரமன்றிச் செயல் களிலும் காணப்படுகின்றன.

மாவிட்ட புரம் கந்தசாமி கோயிலின் மணியகர்த்தாக்களுள் ஒருவர் போல விளங்கிய அப்புக்காத்துச் சுப்பிரமணியம் அவர்களின் மைந்தன் தான் வித்தியானந்தன் விபு லானந்தர் போல வித்தியானந்தரும் தாழ்த்தப்பட்ட மக்களிடையே தோன்றிய நாடகக் காரர்களிடம் அன்று பெரும் செல்வாக்குடன் விளங்கிய இசை நாடகத்தை மேற்கொண்டு வருவதில் மிக முக்கியமாக பங்காற்றி இருக்கிறார். இசை நாடக மேதையான பி.வி. வைரமுத்து அவர்கள் வித்தியானந்தனுக்கு மிக நெருக்கமான நண்பர் என்பதையும் அவருக்கும் இவருக்குமான உறவு ஒரு அற்புதமான உறவு என்பதையும் அவர்கள் இருவரையும் அறிந்தோர் அறிவார்கள்.

**தமிழ் மொழியின் எல்லைகளை அகட்டியமை**

விபுலானந்தரும் வித்தியானந்தரும் தமிழை ஒரு குறிப்பிட்ட சமயத்துக்குள் அடக்கம் முயன்றார்கள் இல்லை அந்தத் தமிழ் பௌத்தர் சமணர் இஸ்லாமியர் கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் உரியது என்ற பரந்த எண்ணத்தை இருவருமே கொண்டிருந்தார்கள்.

விபுலானந்தர் கட்டுரைகள் சிலவற்றிலே சைவத்துக்கு அப்பாலும் தமிழ் வளர்ந்த கதை இருக்கின்றது. தென்னாட்டில் ஊற்றெடுத்த பக்தி இயக்கம் வடநாட்டில் பரவியமை பற்றிய விபுலான்ந்தர் கட்டுரையில் இக்கருத்துக்களைக் காண்லாம். அதேபோல வித்தியானந்தருடைய கட்டுரைகளில் இஸ்லாமிய கிறிஸ்தவ அறிஞர்கள் தமிழை வளர்த்த கதை இருக்கிறது அவரது தமிழ் இலக்கியத் தென்றல் எனும் நூலில் உள்ள சில கட்டுரைகள் இதற்குச் சான்று.

விபுலான்ந்தர் இஸ்லாமிய சூபி ஞானியான குணங்குடி மஸ்தான் சாஹிபு பாடிய ஞானப் பாடல்களில் மிகுந்த ஈடுபாடுடைவர் வித்தியானந்தர் பிறை அன்பன் என்ற பெயரில் இஸ்லாமிய கலை இலக்கியம் பற்றிநூல் எழுதியிருக்கிறார்.

சின்னஞ்சிறிய வட்டத்துக்குள் தமிழை வைத்துக் கொள்ளாது அதை பேசுகின்ற மனிதர்கள் அத்தனை பேரையும் உள்ளடக்கி தமிழை தமிழ் மொழியை பார்த்தவர்கள் இவர்கள் இருவரும்.

இருவரும் நிறுவனங்களுக்கு பொறுப்பாக இருந்திருக்கிறார்கள் கிழக்கு மாகாணத்திலேயே ராமகிருஷ்ணன் மிஷன் நிறுவனங்களுக்கு பொறுப்பாளராக இருந்து அதைத் திறம்பட நிர்வாகித்து அதனூடாக பல்வேறு கல்வியலாளர்களை உருவாக்கியவர் விபுலானந்தர் பேராதனை பல்கலைக்கழகத்தின் தமிழ் துறை தலைவராக இருந்ததுடன் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் உப வேந்தராகவும் அமர்ந்து அவற்றினை நிர்வகித்து அதனூடாகப் பல அறிஞர்களை உருவாக்கியவர் பேராசிரியர் வித்தியானந்தன். இந்த வகையில் இருவரும் ஒப்புநோக்குக்கு உரியவர்கள்.

இருவரையும் ஒப்பிடுகையில் சிற்சில தனித்துவங்களும் வேறுபாடுகளும் கூடக் காண்ப்படுகின்றன அவை காலச் சூழலால் விளைந்த வேறுபாடுகள்.

இருவருக்குமிடையே பல வேறுபாடுகளும் உண்டு. முக்கியமான வேறுபாடுகள் இவை.

விபுலாந்தர் வாலிப வயதில் துறவறம் மேற்கொண்டவர், ஒருவகையான துற்வற வாழ்வு வாழ்ந்தவர். குடும்ப ஊறவுகளோ இல் வாழ்வு அனுபவங்களோ அவருக்குக் கிடைக்க வாய்ப்பு இருக்கவில்லை.

வித்தியானந்தரோ இல் வாழ்வு வாழ்ந்தவர் காரியம் யாவினும் கைகொடுக்கும் கமலாதேவியை மணந்தவர் மூன்று ஆண்பிள்ளைகளினதும் இரண்டு பெண் பிள்ளைகளினதும் தந்தைநிறையச் சகோதரங்களுடன் பிறந்தவர் குடும்பப் பொறுப்புகள் பல அவருக்கு இருந்தன, வாழ்வை எல்லோரையும் போல வாழ்ந்து அனுபவித்து மகிழ்ந்தவர் அதன் ஏற்ற இறக்கங்களோடு பயணித்தவர்.

விபுலானந்தரோ சைவ உணவுக்காரர் வாழ்வைப் புற நிலை நின்று நோக்கியவர் வித்தியானந்தரோ சைவ உணவுக்காரர் அல்ல உணவையும் வாழ்வையும் ருசித்து ரசித்து மகிழ்ந்தவர். வாழ்வை அகநிலை நின்று பார்த்து அதன் இன்பதுன்பங்களை அனுபவித்தவர்.

விபுலானந்தர் எழுத்துகள் தமிழ் நாட்டை மையம் கொள்ள வித்தியானந்தர் எழுத்துகளோ ஈழத்தமிழரையும் அவர்கள் பண்பாட்டையும் மையம் கொண்டிருந்தன.

விபுலானந்தர் ஆய்வுகளும் எழுத்துகளும் தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள் சார்ந்ததாக அமைய வித்தியானந்தர் எழுத்துக்களோ செவ்வியல் இலக்கியங்களோடு நாட்டார் இலக்கியங்களையும் பெருமளவு கொண்டனவாக காணப்படுகின்றன வித்தியானதரின் மட்டக்களப்பு நாட்டுப் பாடல்களும் மன்னார் மட்டக்களப்புக் கூத்து நூல் பதிப்புகளும் இதற்குச் சான்றுகளாகும்.

இந்த ஒற்றுமைகளுக்கும் வேற்றுமைகளுக்கும் காரணம் அவர்கள் இருவரும் வாழ்ந்த வாழ்நிலையும் சூழலும் காலமும் ஆகும். இவையே இருவர் எழுத்துக்களிலும் சிந்தனையிலும் பெரும் மாற்றத்தை மாத்திரமன்றி ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் ஏற்படுத்திய முக்கிய காரணிகள் எனலாம்.

இதுவரையும் இவர்கள் இருவரையும் ஒப்பிட்டு எந்த கட்டுரையும் வந்ததாக என் சிற்றறிவுக்குப் புலப்படவில்லை. இந்தச் சிறிய கட்டுரை இந்த வகையில் சிந்திப்பாருக்கு ஒரு வழிகாட்டியாகவும் முன்னோடியாகவும் இருக்கும் என்று நம்புகிறேன்.

பேராதனை, யாழ்ப்பாணம், கிழக்குப் பல்கலைக்கழகங்களில் இயங்கும் தமிழ் ஆய்வுத் துறைகள் இதனை உயர் படிப்புக்கான ஓர் ஆய்வுத் தலைப்பாக கொடுத்தால் மேலும் பல தகவல்கள் வெளிவரச் சந்தர்ப்பம் உண்டு. அது விரைவில் நடக்கும் என நம்பிக்கையோடு எதிர்பார்ப்போம்.

# அலைபேசி

*கைபேசியே நீயொரு காதலியா? காலனா?*
*காதலரைச் சேர்க்கும் கைகாரனா?*
*கோபிகை கையிலும் குந்தி இருக்கிறாய்*
*கபோதி மடியிலும் தூங்கிறாய்*

*வயோதிபர் பையிலும் வாலிபர் கையிலும்*
*வாசம் செய்யும் உன்னை*
*வியாதி வந்தாற்போல் வீடாது சொறிகிறார்*
*விதியே என்று நோகிறாயே!*


*கண்ணும் கண்ணும் கலந்து நோக்கியா?*
*கண்ணே உன்பெயர் நோக்கியா*
*பண்ணும் பரதமும் பார்க்க வைக்கிறாய்*
*பைத்தியம் போலவும் மாற்றுறாய்*

*செல்லும் இடமெலாம் சினேகமாய் தொடர்வதால்*
*செல்போன் என்பது உன்பெயரோ?*
*அல்லும் பகலும் அருகில் இருப்பாய்*
*அல்லல் நேரத்தில் உதவுவாயே!*

*காலையிற் சிலரது கண்விழிப்பு உன்னுடன்*
*காதலியைக் காண்பதும் உன்னிலே!*
*மாலையில் சிலரை மன்மதன் ஆக்குறாய்*
*மானுட ஜென்மத்தை மயக்கிறாய்*
*சாலையில் போகையில் சல்லாபம் புரிவோரை*
*சுகமாய்ச் சொர்க்கம் சேர்ப்பாயே!*
*வேலையே சிலருக்கு வேண்டாப் போதுமே!*
*வீம்பாய் உன்னைச் சீண்டுவாரே!*


*தொலைவில் உள்ளோரிடம் தொடர்பை வைக்கிறாய்*
*தொலைந்து போனோரைத் தேடுகிறாய்*
*குலைந்த குடும்பத்தைக்கூட்டும் உன்மேல்*
*கோபத்தை ஏன்தான் காட்டுகிறார்?*
*விலையுள்ள உன்னை விலையிலாத் தந்து*
*வலையில் வீழ்த்திறார் சிலர்*
*அலைகளாய் வந்து ஆவலைத் தூண்டும்*
*அலைபேசியே நீடூழி வாழ்கவே!*

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
*(416) 844-7453*


ஈழமுரசு
ஈழமுரசும்
கனடா வாழ் தமிழ் மக்களும்
பெருமையுடன் கொண்டாடும்
தமிழீழத் தேசிய தலைவர்
மேதகு வே. பிரபாகரன்
அவர்களின்
70
தலைவர்
பிறந்தநாள்
அதுவே
தமிழர்
நிமிர்ந்த நாள் !
வீழ்ந்து விடாத
வீரம்
மண்டியிடாத
மானம்
இருப்பாய்
தமிழா
நெருப்பாய் !
AAROSAI
"WHERE MUSIC BEGINS..."
அகவை விழா
மாபெரும் எழுச்சி விழா
2024
நவம்பர்
26
செவ்வாய்க்கிழமை
மாலை
5 மணி
TORONTO
METROPOLITAN CENTRE
3840 Finch Ave East
Scarborough, ON, M1T 3T4
(Kennedy & Finch)
MONTREAL
LE CHATEAU ROYAL
3500 Bd du Souvenir
Laval, Montreal, QC,
H7V 1X2, (514) 660-5891
ஈழமுரசின் விசேட இணைப்பில் தேசியத்தலைவருக்கு வாழ்த்து தெரிவிக்க விரும்பின் தொடர்புகொள்ளவும்
தொடர்புக்கு: 289-277-5920



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1120

## ஆரையம்பதி ஸ்ரீ பரமநயினார் (ஐயனார்) கோயில், மட்டக்களப்பு

-------------

" ஆரையம்பதி பதிவாழ் ஐயனே வருக
கணநாதர் போற்றும் கடவுளே வருக
ஓம்ஆம் எனுமுயர் பராபரனே
ஆம்ஓம் எனும் ஆதியே வருக
ஐந்து கடவுளா ஐந்தொழில் நடாத்தும்
எந்தையே தந்தியிலிவர்ந்து நீ வருக
வஞ்சனை சூனியம் மாறிடவருக
பவமறுத் தருட்கண் பார்த்திட வருக வருகவே..."

ஆரம்ப காலத்திலிருந்து ஐயனார்வழிபாடு, கிராமிய வழிபாட்டு முறை தழுவியதாகவே காணப்பட்டுள்ளது. பிற்காலத்திலே இவ்வழிபாடு ஆகமநெறிக்குட் பட்டதாக மாற்றம் பெற்றுள்ளது. ஆரையம்பதி பரமநயினார் ஆலயத்தில், 1970 ஆம் ஆண்டுவரை சடங்குகளைப் பூசாரிகளே செய்து வந்துள்ளனர். ஆனி மாதத்து பூர்வபட்சத்து நாலாம் பிறைக்கு முன், புதன், சனி, ஆகிய வாரங்கள் தவிர்ந்த நாட்களில் சடங்கு நடைபெறுவது வழக்கம். ஈழத்திலுள்ள ஐயனார் கோயிலின் சடங்கு முறைகள் ஊருக்கேற்ப தனித்தன்மை கொண்டவையாகக் காணப்படுகின்றன. ஆரையம்பதி ஐயனார் கோயிலில் சடங்கு செய்யும் பூசாரி, முறைப்படி நோர்ப்புக் கட்டியபின் சடங்கு நடைபெறும். மஞ்சள் சோற்றைச் சமைத்து, சாமவேளையிலே அதனை ஒரு முடிச்சிலே கட்டி, ஆலயத்தின் முன்பு தொங்க விடுவதையே நோர்ப்புக் கட்டுதல் என்று கூறுவர். நோர்ப்புக் கட்டியபின் அடுத்த நாளே பரமநயினார் சடங்கு நடைபெறும்.

பரமநயினாரின் கணங்களாக வதனமார் கோலத்திலும், மாரியம்மன், பேச்சியம்மன், வீரபத்திரன் முதலிய தெய்வங்களின் கோலங்களிலும் உருக்கொண்டு ஆண்கள் ஆடுவார்கள். வதனமாரின் உருவிலே வருவோர் வில், அம்பு, பொல்லு ஆகியவற்றைக் கையிலேந்தியவண்ணம் ஆடுவார்கள். மாடுகளைப் பிடிக்கும் பாவனையில் மழுக் கயிற்றை வீசி, ஆட்களை இழுப்பர். தெய்வங்களின் பாவனையிலே ஆடுவோரை மந்திவாதிகள் படுகளம் போட்டு ஆடவிடாது மந்திரத்தாற் தடுப்பர். எதிர்தரப்பிலுள்ள மந்திரவாதிகள் கட்டுக்களை மந்திரத்தால் வெட்டி, தெய்வ கோலந் தாங்கியவர்களை ஆடவைப்பர். மந்திரவாதிகளிடையே நடைபெறும் போட்டிகளைப் பார்ப்பதற்காக அயற் கிராமங்களிலிருந்தும் மக்கள் பெருந்திரளாக வருகை தருவர். மாந்திரீக முறைகளைத் துறைபோகக் கற்றவரும், அண்ணாவியாராக விளங்கியவருமான பரிகாரி பொன்னம்பலம் என்பவரது காலத்திலே, பரமநயினார் சடங்கு மிக விமரிசையாக நடைபெற்றதாகக் கூறுவர். சடங்கு நடைபெறும் காலத்திலே பரமநயினார் காவியம், பரமநயினார் அகவல், வதனமார் காவியம், வதனமார் அகவல் முதலியன படிக்கப்படும்.

ஆரம்பகாலத்தில் கிராமிய வழிபாடாக இருந்து, பின் ஆகம முறை தழுவிய வழிபாட்டுநெறிக்கு இக் கோயில் மாற்றம் பெற்றிருப்பினும், கிராமிய தெய்வ வழிபாட்டோடு, ஆகம முறை தழுவிய வழிபாட்டு முறைகளும் அவற்றோடு தொடர்புடைய விரதங்கள் விழாக்களும் சிறப்பாக நடைபெற்று வருவது குறிப்பிடத் தக்கது. மட்டக்களப்புத் திருநாட்டில், கண்ணகி வழிபாடு புகழ்பெற்ற வழிபாடாகப் பலவிடங்களிலும் பின்பற்றப்பட்டு வருகின்றது. நாடெங்கும் பரவலாகக் கண்ணகி கோவில்களைக் காண முடியும். கண்ணகி கோவில் தவிர்ந்த ஏனைய கோவில்களிலும், வைகாசியில் கண்ணகி அம்மனுக்குரிய சடங்கை சிறப்பாகக் கொண்டாடும் வழக்கம், மட்டக்களப்பிலே காணப்படுகின்றது. ஆரையம்பதி பரமநயினார் ஆலயத்திலும், வைகாசிமாதம் ஏழு நாட்கள் கண்ணகி அம்மன் சடங்கு நடைபெறுகின்றது. பூரணை நாளன்று திருக்குளிர்த்தி இடம்பெறும். திருக்குளிர்த்தி நிகழ்விலே ஆயிரக்கணக்கிலே மக்கள் கலந்து, தமது வேண்டுதல்களை முன்வைப்பர். திருக்குளிர்த்தியின் பின் மறுநாள் மாலை திருஊஞ்சல் சிறப்பாக நடைபெற்று, இச்சடங்கோடு கண்ணகி அம்மன் சடங்கு நிறைவுபெறும். இக்காலத்திலே நடைபெறும் கண்ணகி அம்மன் சடங்கிலே, ஒரு கரத்தில் சிலம்பினை ஏந்திய ஸ்தானக நிலையிலுள்ள கண்ணகி அம்மனின் உருவத்தை, எழுந்தருளியாக உள்வீதி வழியே கொண்டு செல்வர்.

ஸ்ரீ பரமநயினார் கோயிலில் 1970 ஆண்டும், அதன்பின்னரும் பல தடவைகள் கும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டுள்ளது. 1989 ஆம் ஆண்டு கொடித்தம்பம் நிறுவப்பட்டுள்ளது. இக்கோயிலில் பூரணை நாட்களிலே திருவிளக்குப் பூசை நடைபெறும். புரட்டாதிச் சனி, கந்தசஷ்டி, விநாயகசஷ்டி, கேதாரகௌரிவிரதம் ஆகிய நாட்களில் விசேட பூசைகள் நடைபெறும். புரட்டாதிச்சனி விரதத்தின் இறுதிநாளன்று, சனிக்கிரகத்துக்கு அபிஷேகமும் ஹோமமும் நடைபெறும். கந்தசஷ்டி விரதகாலத்திலும் கந்தப்புராணப் படிப்பும், திருவிழாவும் மிகச் சிறப்பாக இடம்பெறும். கேதாரகௌரி விரத காலத்தில் இருபத்தியொரு நாட்களும் சிவலிங்கத்தின்முன் கும்பங்கள் வைத்து, பூசைகள் நடைபெறும். கார்த்திகைமாதத்தில் மாதம் முழுவதும் சிவலிங்கத்துக்கு முன்னே கும்பங்கள் வைத்து காசிகண்ட பூசையை நிறைவேற்றுவர்.

இவ்வாலயத்தில் அனைத்து சைவசமய விழாக்களும் கொண்டாடப்படுகின்றன. விநாயகப் பெருமானுக்குரிய விரதங்களுள் விநாயகர்சஷ்டி விரதம் முக்கியமானது. இவ்விரதம் அனுட்டிக்கப்படுகின்ற இருபத்தியொரு நாட்களும், விநாயகப்பெருமானுக்குப் பொங்கல் வைத்து, அலங்காரபூசைகள் நிகழ்த்துவர். விநாயகர் விரதத்தின் இறுதிநாளாகிய பெருங்கதை தினத்தில், விசேடமான பெரும்பொங்கல் நடைபெறும். அத்தோடு பல்வேறுவிதமான நிவேதனப்பொருட்களையும் விநாயகருக்கு நிவேதித்து அலங்காரபூசை இவ்வாலயத்தில் நடைபெறும்.

வளரும்...

# உழைப்பால் உயர்ந்தவர் உள்ளத்தினால் கவர்ந்தவர்

**- மறைந்தார் கலைமாமணி வி.கே.டி பாலன் -**



"எனக்கு ராமாயணம் தெரியாது, மகாபாரதம் தெரியாது தொட்டுப் பாக்கின்றேன். ஐந்து திருக்குறள்கள்தான் தெரியும். பாரதி கவிதைகள் எனக்குப்பிடிக்கும். சினிமாவில் வந்த பாரதிபாடல்களைத்தான் நான் கேட்டிருக்கின்றேன். நான் சராசரி பாமரன். எட்டாம் வகுப்புக்கு குறைவாகக் கல்வி கற்றவர்களில் ஒருவன். எம்.ஜி.ஆர், சிவாஜி இருவரிடமும் நிறையக் கற்றவன். சரியான கல்வியில்லாத எனக்கு அரசியல் மற்றும் இலக்கிய சமூகஅறிவு எனக்கு வந்தது. அதற்குக் காரணம் என் வாடிக்கையாளர்கள்.

திரு. பழ. நெடுமாறன், திரு. வை.கோ, திரு. சீமான் போன்ற அரசியல்வாதிகள், பிரபலமாக சினிமா கலைஞர்கள். பின்னணி பாடகர்கள் என்னுடைய நிரந்தர வாடிக்கையாளர்கள் அவர்கள் என்னுடன் அமர்ந்து பேசும்போது தாங்கள் படித்தவற்றை என்னுடன் பகிர்ந்து கொள்வார்கள். அவர்கள் மூலம்தான் எனக்கு இலக்கியம் அறிமுகமானது. கவிஞர்கள் மு. மேத்தா, அப்துல்ரஹ்மான், நா. முத்துகுமார், வைரமுத்து போன்றவர்களின் நட்பு என்னைக் கவிதை இலக்கியப் பொக்கிஷத்தை ரசிக்க வைத்தது."

மிழகத்தின் தலைசிறந்த அரசியல்வாதிகளும், இலக்கியவாதிகளும் எனக்குச் செவிவழியாகத் தமிழ் பிச்சை போட்டிருக்கின்றார்கள். மரபின் மைந்தன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் "நம்பிக்கை" பெப்ரவரி 2019 இதழில் இடம்பெற்ற நேர்காணல் தொகுப்பில் மேற்கண்டவாறு இடம் பெற்றிருந்த சில பகுதிகள் கனடிய வாசகர்களுக்கு அறிமுகம் செய்துள்ளேன்.

1996 மார்ச் மாதம் சென்னைப்பட்டினம் சென்றவேளை அருமை நண்பர். உங்கள் அறிவிப்பாளர் திரு. பி.எச். அப்துல் அமீது அவர்களால் எனக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்ட உள்ளம் கவர் தோழர்தான் கலைமாமணி வி.கே.டி பாலன் அவர்கள். கால் நூற்றாண்டு காலமாக எங்கள் இருவருக்குமான நட்பு இறுகப் பற்ற நெருக்கமாக நிலைத்துவிட்டது. வாழ்க்கையில் நான் சந்தித்திராத சிலகசப்பான அநுபவங்களை பாலனுடைய அநுபவங்கள் மூலம்தான் நானும் அறிந்து கொண்டேன். "உழைக்கத்துணிந்தால் உலகம் உதவும்" என்று தனது வாழ்க்கையில் ஏறிய ஏணிப்படிகளை என்றும் நினைவு கூர்ந்து மனம் திறப்பார்.

தந்தையின் மறைவிற்க்குப்பின் பிறந்த பதியாகிய திருச்செந்தூரிலிருந்து சென்னை நகருக்கு வந்தவரை - அமெரிக்கன் தூதுவராலய பிளட்போம் தூக்கிவைத்தது. காலையில் கண் விழித்தபோதுதான் படுத்திருந்த இடத்துக்காக விசா எடுக்க வந்த பயணி ஒருவர் இரண்டு ரூபாய் கொடுத்தாராம். அன்றிலிருந்து அமெரிக்கன் விசா வாங்க வரிசையில் நிற்போருக்கு இடம் பிடித்துகொடுத்து பல இரண்டு ரூபாய்களைச் சம்பாதித்தவருக்கு உலகில் பறக்கும் அனைத்து விமானங்களுக்கும் பணயச்சீட்டு விற்பனையாளராக அவருடைய சொந்த நிறுவனமான மதுரா ரவல்ஸ் நிறுவனம் சென்னை எக்மோரில் பரபரப்பாக இயங்கி வருகிறது. பயணத்துறை சார்ந்து இருக்கிற அனைத்து அமைப்புக்களினதும் உறுப்பினராக மதுரா இருக்கிறது. சங்கத்தின் தலைவராகவும் அவராகவே உயர்ந்துள்ளார்.

1981ல் சென்னயின் பிரபல ஹோட்டல் ஒன்றில் சாப்பிடுவதற்காகச் சென்றவேளை உணவக நிர்வாகம் அவரை உள்ளே அனுமதிக்க மறுத்தது. காரணம் அவரது எளிமையான தோற்றம். காலில் அணிந்திருந்த ரப்பர் செருப்பு.

2001ல் அதே ஹோட்டல் நிர்வாகிகள் அவர் பயணித்த அம்பாஸிடர் காரின் கதவை திறந்துவிட்டனர். 12க்கு மேலானவர்கள் கையில் பூக்கொத்துடன் வரவேற்றனர். உங்கள் வரவு நல்வரவாகுக! ஆங்கில மொழியில் வரவேற்புக்கூறினர். அனால் எனது காலில் இப்போதும் பாட்டா சிலிப்பர்தான். அதே கதர் வேட்டி - சட்டை தோளில் துண்டு, நெற்றியில் குங்குமம்.

இப்போது அவர் மறையும் போது துறை திணைக்களத்தின் உயரதிகாரியாகவும், ஐந்து நட்சத்திர ஹோட்டல்களின் அந்தஸ்த்தைப் புதுப்பிக்கும் கையெழுத்துக்குரியவராகவும் உழைப்பால் உயர்ந்தவர், மனிதநேய மாணிக்கம் எனது தோழர் மதுரா பாலன் அவர்கள். சென்னை செல்லும் போதெல்லாம் வாருங்கள் கவிஞரே, வீணை மைந்தரே என வாய் நிறைய அழைத்துக் கட்டியணைப்பார். தான் பங்கேற்கும் பொது நிகழ்ச்சிகளுக்கு என்னையும் கூடவே அழைத்துச் செல்வதோடு, மேடையில் அமர வைப்பார். வி.ஐ பி யினருக்கு அறிமுகம் செய்து வைப்பார். என்னுடைய கனடிய நண்பர், எழுத்தாளர் என்று பெருமிதம் கொள்வார். சென்னையில் எனக்கிருந்த அன்புத் தோழரின் இழப்பு ஈடுசெய்ய முடியாது.



**வீணை மைந்தன் - கனடா**

# இவ்வார ராசிபலன்

**15-11-2024 வெள்ளி தொடக்கம் 21-11-2024 வியாழன் வரையும்**



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் ‘ராஜயோகம்’
“ஜோதிட மகரிஷி”
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377



**மேஷம்:** உடல்நலத்தில் ஷேமம் கிடைக்கும் வாரம். ஆலய தரிசனம் அமைதியை தரும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பண நடமாட்டம் கூடும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப் பயணம் இனிக்கும். புதிய வேலை முயற்சி பலிதமாகும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். இல்லத்தில் மனமகிழ்ச்சி கிட்டும். கடன் சுமை குறையும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். பூமியால் லாபம் உண்டு. செய்த்தொழில் வியாபாரம் செழிக்கும். இல்வாழ்வில் இனிமை கூடும். தென்றல் வீசும். எதிர்ப்புக்கள் விலகும். நோய், நொடிகள் அகலும். பெயர், புகழ் கௌரவம் செல்வாக்கு உயரும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும். விரும்பியது நிறைவேறும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். நட்பு வட்டம் விரிவடையும். பாராட்டுக்கள் கூடும். வேண்டும் வரம் கிட்டும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். ஒரு சிலருக்கு கவுரவப் பதவிகள் தேடி வரும். அரசியல்வாதிகள், ஆன்மீக வாதிகள், உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். பழைய கடன் அடையும். பங்குச்சந்தை லாபம் தரும். நீண்டதூரப் பயணம் லாபம் தரும். கலை ஆர்வம் பெருகும். பொறுப்புக்கள் சிறப்பு சேரும். ஆதாயம் பெருகும். சம்பளம் எதிர்பார்த்தபடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சித்ரகுப்தர், அதிர்ஷ்ட எண்: 4,3,9,1
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,H



**ரிஷபம்:** கணவன், மனைவி ஒற்றுமை அதிகரிக்கும் வாரம். பொருளாதாரம் ஏற்றம் பெருகும். முகப்பொலிவு கூடும். உடல் நலம் சிறக்கும். மனதில் தெம்பும், தைரியமும் கூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளிப்போடுங்கள். திருமணபாக்கியம் கூடி வரும். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை காணப்படும். செல்வாக்கு உயரும். உத்தியோக பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பளபாக்கிகளும் வந்து சேரும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைதூரத் தொடர்பு லாபம் தரும். நவகிரஹ அனுகிரஹம் நன்மை அளிக்கும். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். பந்தாவும் குறையாது. பாக்கெட்டில் காசும் கரையாது. தொட்டது துலங்கும். நினைத்தது நடக்கும். இனிக்கும் வாரம் தான். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். திட்டமிட்ட காரியங்களில் ஒன்றிரண்டு நடந்தேறும். வெற்றிப்பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். குழப்பங்கள் நீங்கும். குதூகலம் கூடும். மூத்தோர்கள் மனக்குறை அகலும். நினைத்ததை சாதித்துக் காட்டும் சாதனையான காலம். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். கடன் கச்சைகள் தீரும். குடும்ப மேன்மை அதிகரிக்கும். தொட்டக் காரியம் ஜெயமாகும். பொருளாதார நிலை உயரும். தேவைகள் பூர்த்தியாகும். தேக பலம் கூடும். தொழில் போட்டி மறையும். புதிய முயற்சிகள் கைகூடும். நண்பர்கள் உதவி கிட்டும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. மாணவர்களுக்கு படிப்பில் கவனம் செலுத்துவது நல்லது.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பச்சையம்மன், அதிர்ஷ்ட எண்: 9,7,5,1
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,P



**மிதுனம்:** மதிநுட்பத்தோடு செயல்படும் வாரம். வியாபாரம் வெற்றி தரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. சேமிப்பு வளரும். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. பயணத்தால் அனுகூலம் உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். பணவரவு சுமாராக இருக்கும். தந்தை உடல் நலனில் கவனம் தேவை. வெளியூ பயணம் உண்டு. பால் தானம் பாவம் போக்கும். வம்பு, தும்புகள் ஒழியும். மேலதிகாரியின் பாராட்டுக் கிடைக்கும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். புதிய கடன் வாங்க நேரிடும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். பேச்சில் நிதானம் தேவை. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். புதிய நட்பில் கவனம் தேவை. செய்த்தொழிலில் லாபம் தரும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். மன ஆரோக்கியம் சிறக்கும். திட்டமிட்ட காரியங்கள் கைகூடி வரும். இல்லத்தில் சுபகாரியங்கள் நடந்தேறும். நட்பு வட்டம் விரிவடையும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் வந்து அலைமோதும். புதிய வாய்ப்புக்கள் பயன் தரும். புத்தி சாதுர்யம் பெருகும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு, மனை யோகம் உண்டு. விரக்திகள் மறையும். சிக்கனம் தேவை. காதலர்கள் ஒற்றுமை அதிகரிக்கும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். அன்னிய தேசப் பயணம் உண்டு. வரவுகள் பெருகும். வழக்குகள் முடிவுக்கு வரும். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அங்காளம்மன், அதிர்ஷ்ட எண்: 6,9,4,3
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,K



**கடகம்:** ஆசைகள் நிறைவேறும் வாரம். கட்டிடத்தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். பயண முயற்சி பலன் தரும். முன் கோபத்தை குறைக்க வேண்டும். ஆபத்துக்கள் விலகும். அதிகாரம் உயரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. வாகன யோகம் உண்டு. வரவுகள் திருப்தி தரும். கடன் பாக்கிகள் வசூலாகும். பேச்சில் நிதானம் தேவை. பொருளாதாரம் மேம்படும். தோதான வாழ்வமையும். இல்லம் தேடி வாய்ப்புகள் வரும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சிப் பொங்கும். ஏற்றங்கள் அதிகரிக்கும். புதிய தொழில் மாற்றம் ஏற்படும். எதிலும் வெற்றி கிட்டும். திருமண தீபம் சுடர்விடும். அணிமணிகள் சேரும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். சுதந்திரமாக செயல்படுவீர்கள். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். மனக்கசப்பு நீங்கும். அரசு வழியில் ஆதாயம் உண்டு. கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. சகோதரியினால் நன்மை உண்டு. உடல்நலம் மேம்படும். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். கணவன், மனைவி உறவு இனிக்கும். ஏற்றமான தருணம் அமையும். தொழில் அபிவிருத்தி உண்டு. மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புக்கள் வரும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். சிரமப்பட்ட காரியம் நிறைவேறும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். பங்குச்சந்தையில் லாபம் புரளும். திடீர் பயணம் உற்சாகம் தரும். கர்ம வினைகள் அகலும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பவானி அம்மன், அதிர்ஷ்ட எண்: 3,9,5,4
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,T



**சிம்மம்:** அதிகார பேச்சுக்கள் அரங்கேறும் வாரம். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். பெண்களுக்கு வேலை பளு அதிகரிக்கும். ஆரோக்யம் சீராகும். தன வரவுகள் பெருகும். நிர்வாகப் பொறுப்புக்கள் கூடும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. அரசியல் ஆதாயம் உண்டு. நீண்ட நாள் பிரச்சினை முடிவிற்கு வரும். நல்லோர்கள் வாழ்த்து கிடைக்கும். நிதானத்தோடு செயல்பட வேண்டும். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். அரசு வழியில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும். பெற்றோர் உடல் நிலையில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழில் லாபம் அதிகரிக்கும். அன்னதானம் செய்து ஆனந்தம் அடையலாம். பித்ருக்கள் சாபம் நீங்கும். சேமிப்பு பெருகும். திறமைகள் வெளிப்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். தொழில் இடமாற்றம் நன்மை தரும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். எதிரிகள் உதிரியாவார்கள். செல்வாக்கு கூடும். சொல்வாக்கு மேம்படும். பங்குச்சந்தையில் பணம் புரளும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். தர்ம சிந்தனை மேலோங்கும். சகோதர வழியில் கவனம் தேவை. “ஆலய தரிசனம் பாவ விமோசனம்” “கோபுர தரிசனம் கோடி புண்ணியம்” மாற்றம் ஏற்படும். புதுமையை விரும்புவீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: யானை பாத விநாயகர், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,J



**கன்னி:** வரவுகள் அதிகரிக்கும் வாரம். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. வாழ்த்துச் செய்திகள் வரும். மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். உறவினர் வருகை உண்டு. புதிய நட்பு ஏற்படும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். வாகன யோகம் உண்டு. வெற்றியை எட்டும் காலம். உடன்பிறப்புக்களின் உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் மதிப்பும், மரியாதையும் உயரும். குடும்பத்தினர்களிடம் அனுசரிப்பு ஏற்படும். கூட்டுப் பிரார்த்தனை மாற்றத்தை ஏற்படுத்தும். மகிழ்ச்சியான செய்தி வரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பெண்களின் ஆலோசனை ஆதாயம் தரும். இனம் புரியா சந்தோஷம் மனதில் குடிக்கொள்ளும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். செயல்பாட்டின் தீவிரம் கூடும். குடும்பத்தில் மேன்மைகள் அதிகரிக்கும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். புதிய முயற்சிகள் அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். பழைய கடன் வசூலாகும். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பேச்சில் பணிவு தேவை. மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. அயல்நாட்டுப் பயணம் உண்டு. உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். மேன்மைகள் அதிகரிக்கும். திறமைகள் வெளிப்படும். மருத்துவச் செலவுகள் குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மன நிம்மதி அதிகரிக்கும். விவேகமான பேச்சுக்களால் வீண் பழி அகலும். வருமானம் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. மாற்று யோசனை பயன் தரும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை கூடும். விளையாட்டில் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: அய்யனார் சுவாமி, அதிர்ஷ்ட எண்: 4,9,6,2
அதிர்ஷ்ட நிறம்: இளம்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,L



**துலாம்:** சாதகமான சூழ்நிலைகள் அமையும் வாரம். தொட்டது துலங்கும். யோக பலன் கூடும். வம்பு வழக்குகள் தீரும். எண்ணங்கள் வண்ண மயமாகும். உறவினரால் உதவி கிட்டும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும். வியாபாரம் விருத்தியாகும். பங்குச்சந்தையில் லாபம் அதிகரிக்கும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும். விவசாயிகள் கோரிக்கைகள் நிறைவேறும். பெரியோர்களின் பாராட்டு கிடைக்கும். பணியாட்களின் ஆதரவு பெருகும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். தொழிலின் ரகசியம் காப்பாற்றப்படுவீர்கள். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். பெற்றோர்கள் அன்பு அதிகரிக்கும். மற்றவர்களிடம் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது. வாழ்க்கையில் பிடிப்பு அதிகரிக்கும். காரிய அனுகூலம் உண்டு. தேக ஆரோக்கியம் திருப்தி தரும். தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். சுறுசுறுப்பு பெருகும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். தாய் வழி உறவில் கவனம் தேவை. மனைவியின் பிரார்த்தனை மாற்றத்தை ஏற்படுத்தும். ஏற்றுமதி தொழிலில் லாபம் தரும். கலவரமான சூழ்நிலை காணப்படும். போட்டி, பொறாமைகள் விலகும். பாகப்பிரிவினை ஏற்படும். மனை வாங்கும் யோகம் உண்டு. மன நெருக்கடிகள் தீரும். ஊக்கம் அதிகரிக்கும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ மருத காளியம்மன், அதிர்ஷ்ட எண்: 1,6,4,9
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,K



**விருச்சிகம்:** தனித்து நின்று ஜெயித்துக் காட்டும் வாரம். விருந்தினர் வருகை உண்டு. வங்கி சேமிப்பு உயரும். பயணம் லாபம் தரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். கமிஷன் தொழில் லாபம் தரும். வாழ்வில் வசந்தம் கூடும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இல்லத்தில் மேன்மைகள் அதிகரிக்கும். சூழ்நிலைகள் சாதகமாகும். புதிய பொருள் சேர்க்கையுண்டு. அந்நிய தேசப் பயணம் உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். புண்ணியம் சேரும் காலம். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். வீண் பிரச்சனைகள் அகலும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். பணமும், பாராட்டும் சேரும். ஆசைகள் பூர்த்தியாகும். வாயில் தேடி வரன் வரும். வியாபாரத்தில் வேகம் கூடும். உத்தியோக உயர்வு தாமதமாகும். கணவன், மனைவி அன்யோன்யம் குறையும். பூர்வீகச் சொத்துக்கள் விற்பனையாகும். விலகிச் சென்றவர் விரும்பி வருவர். திருமண பேச்சு முடிவிற்கு வரும். வரவுகள் திருப்தி தரும். மருத்துவச் செலவுகள் குறையும். தாய் வழி தகராறுகள் குறையும். குடும்ப கௌரவம் உயரும். காதல் கைகூடும். கலைகளில் ஆர்வம் அதிகரிக்கும். கனிவான பேச்சு அவசியம். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். விரக்திகள் மறையும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். திடீர் மாற்றங்கள் நிகழும். கலைஞர்களுக்கு கௌரவம் உயரும். மதிநுட்பம் மாபெரும் வெற்றியைத் தரும். தேக ஆரோக்யம் மிளிரும். எதிர்கால சிந்தனை ஏற்றம் தரும். விரோதங்கள் விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அன்னமார் சுவாமி, அதிர்ஷ்ட எண்: 6,3,9,1
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,P

(தொடர்ச்சி 21 பக்கம்)

# இவ்வார ராசிபலன்

(20 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** கலைகளில் ஆர்வம் அதிகரிக்கும் வாரம். எடுத்த தொழில் முயற்சியில் வெற்றி உண்டாகும். உள்ளம் மகிழும். பொல்லாதவர்கள் தொல்லைகள் ஒழியும். உடல்நலம் சீராகும். உற்சாகம் மேலோங்கும். உறவுகளால் நன்மை ஏற்படும். பயணம் வெற்றி தரும். சமுதாய விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. கல்வியில் மேன்மைகள் உண்டாகும். துயரம் இல்லாத உயரங்களை சந்திப்பீர்கள். முன்னோர்கள் ஆசீர்வாதம் உண்டு. முன்னேற்றங்கள் அதிகரிக்கும். மாற்று மருத்துவம் பலன் தரும். அனுகூலச் செய்திகள் வந்து சேரும். ஆபரணப் பொருள் களவுப்போகும். சுபச்செய்தி தேடி வரும். பாராட்டுக்கள் உயரும். அலைச்சல் அதிகரிக்கும். ஊதிய உயர்வு கிட்டும். வியாபாரம் சுமாராக இருக்கும். வாகன மாற்றம் ஏற்படும். கடன்சுமை குறையும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். மாலை நேரத்தில் பெரிய தகவல் வந்து சேரும். பெண்களுக்கு அணிகலன் சேரும். பணியாட்கள் ஆதரவு பெருகும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். வளமான சிந்தனை உதயமாகும். அலைச்சல் ஆதாயம் தரும். தீமைகள் விலகும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். பயணங்களால் வெகுமதி கூடும். கூட்டுப்பிரார்த்தனை நன்மை தரும். இடையூறுகள் அகலும். பெண்களுக்கு பெருமை சேரும். பொது வாழ்வில் புகழ் கூடும். தொழில் வளர்ச்சி பெருகும். ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் விலகும். ஆன்மீக நாட்டம் ஏற்படும். வறுமையின் வாட்டம் குறையும். அவமானங்கள் அகலும். உதவிகள் கிடைக்கும். வெளியூர் பிரயாணம் வெற்றி தரும். வெகுமானம் கிடைக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பிரம்மசக்தி, அதிர்ஷ்ட எண்: 2,4,9,6
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,Z





**மகரம்:** கர்ஜனையோடு வலம் வரும் வாரம். பிரிந்த கணவன், மனைவி ஒன்று சேர்வார்கள். பெற்றோர்கள் உதவி கிடைக்கும். விவேகம் வெற்றி தரும். தெளிவான முடிவுகள் உதயமாகும். எதிர்கால தேவைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். எண்ணங்களால் ஏற்றம் பெருகும். உடல்பொலிவு கூடும். பணப்பற்றாக்குறை நீங்கும். கல்வியில் கவனம் தேவை. பயணத்தால் அனுகூலம் உண்டு. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. உறவினர்கள் ஒத்துழைப்பு அதிகரிக்கும். நண்பர்களால் நன்மை உண்டாகும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். விறுவிறுப்பாக செயல்படுவீர்கள். திட்டமிட்ட செயல்பாடு தேவை. சாதகமான சந்தர்ப்பங்கள் நிகழும். ஆழமான மேன்மைகள் தொடரும். வெளிவட்டாரத் தொடர்பு பெருகும். வேண்டாத நபர்கள் விலகுவர். வினைகள் அகலும். புதுமைகள் நிறைந்த காலம். நல்லச்செய்திகள் நாடி வரும். நீண்ட நாளைய கனவு நிறைவேறும். தடைகள் அகலும். உயர் பதவி யோகம் உண்டு. மன உற்சாகம் களை கட்டும். அரசியல் ஆர்வம் ஏற்படும். தெய்வ திருப்பணிகளில் ஆர்வம் கூடும். சாமர்த்தியமாக செயல்படுவீர்கள். பொருள் வரவு இருக்கும். பெண்களின் ஆலோசனை பெருமை சேர்க்கும். பணியில் பாராட்டு கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். வயிறு உபாதைகள் வந்து போகும். வார்த்தைகளில் சற்று கவனம் தேவை. நண்பர்கள் சந்திப்பு நன்மை பயக்கும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். வியாபாரம் சிறக்கும். மனைவி பிள்ளைகளிடம் மதிப்பு உயரும். திடீர் பயணம் ஏற்படும்.


வழிபட வேண்டிய தெய்வம்: ஈசான்ய லிங்கம், அதிர்ஷ்ட எண்: 4,9,2,3
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,J




**கும்பம்:** மாங்கல்ய பாக்கியம் அமையும் வாரம். பிள்ளைகளிடம் மதிப்பு உயரும். காரிய வெற்றி கிட்டும். பெரியோர்களின் ஆதரவு பெருகும். ஆடம்பர பொருள் சேரும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். குடும்ப குழப்பங்கள் அகலும். எதிர்ப்புக்கள் மாயமாய் மறையும். பெண்களால் பெருமை உண்டு. விளையாட்டுத் துறையில் வெகுமானம் உண்டு. சச்சரவுகள் சமாதானத்தில் முடியும். விவசாயம் லாபம் தரும். வீடு, மனை யோகம் உண்டு. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. உடல் உஷ்ணம் அதிகரிக்கும். கடன் பாக்கிகள் வசூலாகும். பணவரவு திருப்தி தரும். குடும்ப குழப்பம் தீரும். பிள்ளைகள் வழியில் சந்தோஷம் அதிகரிக்கும். பணியாட்களிடம் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். சகோதர ஒற்றுமை உண்டு. ஏற்றுமதி தொழிலில் லாபம் அதிகரிக்கும். உழைப்பு கடுமையாக இருக்கும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. புதிய தொழில் அமையும். பெருமைகள் சேரும். அடுத்தவர் தலையீடு அமைதியை கெடுக்கும். மனநிலையில் மாற்றம் ஏற்படும். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். பயணம் அனுகூலம் தரும். மனம் மகிழ்ச்சி அதிகரிக்கும். கொடுக்கல், வாங்கலில் திருப்தி ஏற்படும். சகோதர ஒற்றுமை பலப்படும். புத்துணர்வோடு செயல்படுவீர்கள். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். வாய்ப்புக்கள் வாயில் தேடி வரும். நல்லோர்களின் வாழ்த்துக் கிட்டும். ஆண்களின் அதிகாரம் உயரும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். சுப விரயம் உண்டு. குடும்ப மேன்மைகள் உண்டாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ வைகுண்ட நாதர், அதிர்ஷ்ட எண்: 9,7,5,4
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,N




**மீனம்:** இனிய நட்புக்களால் பெரிய வெற்றி கிடைக்கும் வாரம். உண்மைகள் வெளிப்படும். உறவுகள் தாமதமாகும். கூட்டுத்தொழில் லாபம் தரும். தன சேர்க்கையுண்டு. மன நிம்மதி குறையும். அலைச்சல் அதிகரிக்கும். புதிய முயற்சியில் ஈடுபடலாம். வாகனச் செலவு ஏற்படும். பணியில் பாராட்டுக் கிட்டும். சிக்கனத்தை கையாள வேண்டும். பொறுப்புக்கள் கூடும். சேமிப்பு அதிகமாகும். புதிய சிந்தனை உதயமாகும். அணிகலன்கள் சேர்க்கை ஏற்படும். கண்ணாடிப் பொருட்கள் சேதம் உண்டாகும். கௌரவத்தில் கவனம் தேவை. கலக்கமான மனநிலை காணப்படும். பயணம் அனுகூலம் தரும். வரவுகள் திருப்தி தரும். உதவிகள் குவியும். நீண்ட கால எண்ணம் நிறைவேறும். அத்தியாவசிய தேவைககள் பூர்த்தியாகும். போதிய தனவரவு இருக்கும். மாலை நேரத்தில் கவனம் தேவை. பெண்களுக்கு ஆபரணம் சேரும். சொத்துப் பிரச்சனை தீர்வுக்கு வரும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். எதிர்ப்புக்கள் தவிடுப் பொடியாகும். நண்பர்களால் மதிப்பு உயரும். அதிகாரியின் பாராட்டு கிட்டும். பணியில் இடமாற்றம் ஏற்படும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பெருமைகள் கூடும். செல்வாக்கு உயரும். குடும்ப அன்யோன்யம் சிறக்கும். நல்லச் செய்திகள் நாடி வரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாணவர்களுக்கு படிப்பில் பிடிப்பு ஏற்படும். முயற்சிகளில் வளர்ச்சியடையும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடி வரும். தொழில் ரகசியம் காப்பது நல்லது. உறவினர்களிடம் சஞ்சலம் ஏற்பட்டு மறையும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ செல்வநாயகி, அதிர்ஷ்ட எண்: 7,4,1,2
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,R



tasty தமிழா
தமிழ் மண்ணிலிருந்து
நேரடியாக உலகெங்கும்...
பனை வெல்லம்
தேன் நெல்லி
மரச்செக்கு எண்ணெய்கள்
சுக்கு மல்லி காபி தூள்
யாழ். கறித்தூள்
இலங்கை மற்றும் தென்னிந்திய மசாலா பொருட்கள்
பாரம்பரிய உணவு வகைகள்..
கனடாவில்
Tasty தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்..
MAHAANS PICK & PRESS OIL MILL INC
Organic Bulk Store & Water Filling Station
5635 Finch Ave East,
Unit 5, Scarborough M1B 5K9.
Call:
416 293 4010
MAHAANS
PICK & PRESS OIL MILL INC




உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?
Legalize your basement now!
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Painting
* Custom Closets
Coverall Group Inc.
Contact: Siva
416-706-8160

# MORTGAGE FINANCIAL SOLUTIONS

- RESIDENTIAL
- COMMERCIAL
- INDUSTRIAL
- CONSTRUCTION
- VACANT LAND




**RESIDENTIAL- COMMERCIAL**

- **Purchase**
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- **Refinance**
- **Renewal**
- **Equity line of Credit**

Contact Us Today

**NESAN**
*Subramaniam*
**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

**Powered By**
MORTGAGE ALLIANCE
RightBroker=RightMortgage
Mortgage Agent level 1 Licence # M15001465
Mortgage Alliance, Brokerage #10330

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

மொன்றியல் நகரில்
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பழமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய எங்களுடன்
தொடர்பு கொள்ளவும்.
416 752 1524

Keith Sanmugathas, Broker
Sun Sanmugathas, Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca


26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

உதயம் 1493 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday November 15, 2024

# உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் பெயரையும் அதன் இலட்சனையையும் சட்ட விரோதச் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தும் ஜேர்மனி வாழ் மாவை தங்கராசா

## அவருக்கு உடந்தையாகச் செயற்படும் அ. அமிர்தலிங்கத்தின் புதல்வர் இங்கிலாந்து வாழ் அ.பகீரதன்

### உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கண்டனம்


துரை கணேசலிங்கம்

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் என்னும் புனிதமான அமைப்பு 1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கப்பெற்ற பின்னர் இந்த வருடத்தின் இயக்கத்தின் பொன்விழா ஆண்டாக 2024 திகழ்கின்றது. உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைமையகம் கடந்த பல வருடங்களாக கனடாவில் பதிவு செய்யப்பெற்று உலகெங்கும் பல நாடுகளில் மாநாடுகளை நடத்தியும் தொடர்ச்சியாக தமிழ் மொழி சார்ந்தும் பண்பாடு சார்ந்தும் பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. இயக்கத்தின் பெயரும் இலட்சனையும் கனடாவின் மத்திய அரசாங்கத்தில் பதிவு செய்யப்பெற்று அதன் உரிமைத்துவம் கனடாவில் இயங்கிவரும் அதன் இயக்குனர் சபைக்கே உரித்தானவையாக விளங்குகின்றன.
(தொடர்ச்சி 6ம் பக்கம்)

# THE NORTH TORONTO CREMATORIUM OFFICIALLY OPENED ON SUNDAY, 10-11-2024 IN STOUFFVILLE, ONTARIO

Mr. Eric Tappende, his wife Susanne Tappende and other invited Guests including Ontario's Housing Minister Paul Calendra were gathered there to grace the ceremony.

## CHAPEL RIDGE FUNERAL SERVICES நிர்வாகத்தின் கீழ் NORTH TORONTO CREMATORIUM என்னும் புதிய தகனக்கிரியைகளை நடத்தும் நிறுவன திறப்பு விழா





தமிழ் மக்கள் அதிகளவில் நாடிச் செல்லும் **CHAPEL RIDGE FUNERAL SERVICES** நிர்வாகத்தின் கீழ் என்னும் புதிய **NORTH TORONTO CREMATORIUM** இறுதிக்கிரியைகள் மற்றும் தகனக்கிரியைகளை ஏற்று நடத்தும் நிறுவனத்தின் திறப்பு விழா சிறப்புற நடைபெற்றது. கடந்த 10-11-2024 ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற இந்த புதிய சேவை நிறுவனத்தின் திறப்புவிழாவில் ஒன்றாரியோ மாகாண அமைச்சர் உட்பட பல பல அரசியல் பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர். நிறுவனத்தின் தலைவர் **Eric and Susanne Tappende** மற்றும் நிறுவனத்தின் சிரேஸ்ட இறுதிக்கிரியைகள் நடத்தும் இயக்குனரும் தமிழ் பேசும் அன்பருமான விலோசன் சிவதர்மன் உட்பட பலரும் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டனர். அங்கு தமிழ்ச் சமூகத்தின் சார்பாகவும் பல அன்பர்கள் கலந்து சிறப்பித்தார்கள்.
**For more information, please contact Vilosan at 416.993.0826**

# Ontario Government expands charging stations to make it more accessible to Electric Vehicle Users

## பாவனையாளர்கள் எளிதில் பயன் பெறும் வகையில் மின்வாகன மின்னேற்றி நிலையங்களை ஒன்றாறியோ அரசு விரிவாக்குகிறது



ஒன்றாரியோ அரசு, மின் வாகனங்களுக்கான **(EV)** மின்னேற்றும் நிலையங்களை மாநிலமெங்கும், குறிப்பாக வடக்கு மற்றும் கிராமப்புறங்களில் வசதிகள் குறைந்த பகுதிகள் உள்ளடங்கலாக 1,300 இற்கும் மேற்பட்ட புதிய மின்வாகன மின்னேற்றி நிலையங்களை அமைக்க 63 மில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ளது. இந்த விரிவாக்கம் மின்வாகனங்களில் பயணிப்போர் விளையாட்டரங்கங்கள், மருத்துவமனைகள், சமூக மையங்கள் போன்றவற்றுக்கு அருகாமையில் 270 இடங்களில் மின்னேற்றி வசதிகளை எளிதாகப் பெற்றுக்கொள்ள உதவும்.

இது பற்றி கனடா உதயன் பத்திரிகைக்கு கருத்துக் கூறிய மாகாண இணை அமைச்சர் விஜய் தணிகாசலம், "நாம் மின்வாகனங்களுக்கான மின்னேற்றி வலையமைப்பை விரிவாக்குவதன் மூலம் ஒன்றாறியோவின் ஒவ்வொரு மூலையிலும் உள்ள ஓட்டுநர்களுக்கு குறைந்த செலவில், சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பற்ற போக்குவரத்துக்கு உதவுகிறோம்" என்று கூறினார். இம்முதலீடு, எதிர்காலத்தில் எரிசக்தி விலையை குறைக்கவும் மாநிலமெங்குமான ஸ்திரத்தன்மையைப் பேணவும் ஏதுவான "மிதமான ஆற்றல் சட்டத்தின்" **(Affordable Energy Act)** ஒரு பகுதியாகும். என்றும் அவர் குறிப்பிட்டார்.

# "கனடா வாழ் தமிழ் மக்கள் தங்கள் வாழ்க்கையிலும் சடங்குகளையும் நடத்துவதிலும் வெளிப்படைத் தன்மையைக் கடைப்பிடிப்பதை நான் வியந்து பாராட்டுகின்றேன்"

## மொன்றியாலில் நடைபெற்ற தனது கவிதைத் தொகுதி அறிமுக விழாவில் கவிஞர் "ஆரணி" புகழாரம்

நான் கனடாவிற்கு வருகை தந்து கடந்த இரண்டு மாத காலமாக இங்கு தங்கியிருந்து பல விழாக்களிலும் கலை இலக்கிய கூட்டங்களிலும் திருமணங்கள் மற்றும் அஞ்சலி நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு வருகையில் நான் அவதானித்த விடங்களில் முக்கியமாக, கனடா வாழ் தமிழ் மக்கள் தங்கள் வாழ்க்கையிலும் சடங்குகளையும் நடத்துவதிலும் மிகுந்த வெளிப்படைத் தன்மையைக் கடைப்பிடிப்பதைக் கண்டு நான் வியந்து பாராட்டுகின்றேன். மேலும் அவர்கள் கனடாவில் தமிழர் வாழ்வியல் பழந்தமிழர்வாழ்வியலை பாதுகாக்கும் பிரயத்தனத்தைக் காணமுடிகிறது.
எமது வாழ்க்கைமுறைச்சடங்குகளை, விழாக்களை நடத்துகிற பாங்கு மெய்சிலிர்க்கவைக்கிறது. ஒரு மரணச்சடங்கினைக்கூட அந்தச்சடங்கின் தார்ப்பரியம் பேணி ஒரு சீராக நடத்துகின்ற விதம் மற்றும் எதிர்காலக்கனடியத்தமிழ் சமூகத்திற்கு தமிழர் வாழ்வியலையும் அதன் சிறப்புகளையும் கடத்துமுகமாக அவர்களுக்கு கலைத்துறை, இலக்கியத்துறைகளில் ஈடுபடுத்தும் முயற்சிகளும் பாராட்டுக்குரியன.அத்துடன் இங்கு நடைபெறும் தமிழர் விழாக்களில் தமிழ் நுண்கலைகளுக்கு கொடுக்கின்ற முக்கியத்துவம் போன்றவற்றை நான் கண்டு ரசித்து அந்த இளைங்கலைஞர்களையும் பல தடவைகள் பாராட்டியுள்ளேன்.
(தொடர்ச்சி 14ம் பக்கம்)